விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 161

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க்குற்ற விசாரணையின்றேல்

# சர்வதேச நெருக்கடிகள் அதிகரிக்கும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(லண்டன்)

**போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு நீதியான நியாயமான இணக்கப்பாட்டை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் தவறுமானால், இது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றின் விசாரணைக்கு வழிகோலும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது. இவ்வாறு ரொய்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்திய அரசாங்கத்தினதும் மேற்குலக நாடுகளினதும் அழுத்தங்களின் காரணமாக இலங்கை அரசாங்கமானது யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எந்தவொரு நீதித்துறைசார் அதிகாரங்களையும் கொண்டிராத அரசாங்க அதிகாரிகளுக்கு பரிந்துரை மட்டும் வழங்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, யுத்தக் குற்றச்சாட்டுகள் உள்ளடங்கலாக இலங்கைக்குள் இடம்பெற்றுள்ள முக்கிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளது.

தேங்கிக் கிடக்கும் முக்கிய குற்றச்சாட்டுகள் தொடர்பான முறைப்பாடுகளை அலசி ஆராய்வதற்கு ஓய்வுபெற்ற நீதிபதிகள் கொண்ட குழு வொன்றை நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நியமிக்கப்படவுள்ள இக்குழுவானது நாட்டின் சகல பாகங்களிலும் இடம்பெற்றுள்ள மிகவும் முக்கியமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராயும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெரேரா ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டு போர் முடிபடைந்த 2009-ம் ஆண்டில், இலங்கைப் படைகளால் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழ் மக்களின் விடயத்தில் இந்தியா மௌனம் காக்க கூடாது

## இந்திய முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ் மக்களின் மனிதவுரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு என இந்தியாவின் முன்னாள் நீதியரசர் ரஜீந்தர் சஸார் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை நிலைநிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையும் இந்தியாவும் இதுவரை எதுவும் செய்யவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே அவர் இது குறித்து தெரிவித்துள்ளார். இக்கட்டுரையில் உள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் காத்திரமான (02ஆம் பக்கம் பார்க்க)

## நெடியவன் பிணையில் விடுதலை

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவராகவும் நோர்வே தலைவராகவும் கருதப்படும் நெடியவன் நிபந்தனைப் பிணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடியவன் என்ற இயற்பெயர் கொண்ட பேரின்பநாயகம் சிவபரன் அண்மையில் நோர்வேயில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். (02ஆம் பக்கம் பார்க்க)

## கேபியின் கருத்துக்களுக்கு பதிலளிக்க இந்தியா மறுப்பு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக ஏற்றுக்கொண்டு குமரன் பத்மநாதன் அண்மையில் அளித்திருந்த பேட்டி குறித்து தற்போதைக்கு கருத்துக்கள் எதனையும் வெளியிடுவதில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.

ஆயினும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவம் குறித்து இந்திய ஊடகங்களுக்கு விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்திருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 தொலைக்காட்சிக்கு மன்னிப்புச் சபையின் விருது!

(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற போரின் போது மேற் கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் செய்திகளை வழங்கிய பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சிக்கு சர்வதேச மன்னிப்புச் சபையால் வருடம் தோறும் வழங்கப்படும் 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த தொலைக்காட்சி செய்திகளுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையால் பத்து பிரிவுகளின் கீழ் வருடந்தோறும் ஊடக விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஊடக விருதை (20ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் கன மழை பலியானோர் ஏழாக அதிகரிப்பு

(கொழும்பு)

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கேகாலை, காலி, கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார். மேலும் 3 ஆயிரத்து 627 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கேகாலை பகுதியில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை போர்க்குற்ற விவகாரம்

# மனித உரிமை அமைப்புக்கள் அமெரிக்க அரசுக்கு அழுத்தம்

(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்கா வலியுறுத்த வேண்டும் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனிதவுரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மோதல் தவிர்ப்புக் குழு உட்பட 10 அமைப்புகள் இணைந்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளன.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் சர்வதேச சமூகம் (02ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.

சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03

(C-2291)


# முன்பள்ளி விளையாட்டு விழா

(ஊரெழு)

ஊரெழு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வேலாயுதம் ஜீவரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி க.ஜானகி, வலி.கிழக்கு பிரதேச செயலக ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.பத்மகுமாரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

(C-2290)


## யாழ்.செய்தியாளர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் ஒருவர் நேற்று சனிக்கிழமை இனந்தெரியாத குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த எஸ்.கவிதரன் (வயது 32) என்பவரே தாக்கப்பட்டவராவார். அவர் நேற்று காலை அலுவலகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் வைத்து ஐந்து பேர் கொண்ட இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-5-6)

# மனித உரிமை அமைப்பு...

காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் என இக்கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு அவதானமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஆதாரபூர்வமாக முன்வைத்துள்ளது.

இப்போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமை, பாலியல் வன்முறைகள் மற்றும் படுகொலைகள் இடம்பெற்றமை, பரவலான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை, காணாமற் போதல் சம்பவங்கள், உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்குத் தடை விதித்தமை மற்றும் ஊடகவியலாளர்களையும் தொண்டு நிறுவனங்களையும் நிலைமைகளை அவதானிக்க அனுமதிக்காமை போன்ற விடயங்கள் இடம்பெற்றதை நிபுணர்கள் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச நியமங்களை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை என நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விவகாரத்தில் அமெரிக்கா தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வரும் கரிசனையையும் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் கொண்டலீசா ரைஸ் கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நிபுணர்கள் குழு அறிக்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையையும் நாம் வரவேற்கின்றோம் என்றுள்ளது. (ச-5)

# நெடியவன்...

நோர்வே பொலிஸார் கடந்த வாரம் நெடியவனைக் கைது செய்து ஒஸ்லோ நீதிமன்றில் ஆஜர் செய்தனர். நெதர்லாந்து அரசாங்கத்தின் கோரிக்கைக்கமைவாகவே நெடியவன் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைப் பிணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட போதிலும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு நெடியவனுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நெதர்லாந்து அதிகாரிகள் தொடர்ந்தும் நெடியவனிடம் விசாரணை நடத்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-1)

# ஈழத்தமிழ் மக்களின்...

விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவும் இது வரை மேற்கொள்ளவில்லை.

இப்போரின்போது போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு காத்திரமான ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளது.

நிபுணர்கள் குழுவினால் காத்திரமான ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்ட சர்வதேச போர் நியமங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான, வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றம் இழைத்தவர்கள் எவராயினும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு இத்தகைய விசாரணைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச நியமங்களைக் கொண்டிருக்கவில்லை.

அத்துடன் இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தடையாகவிருந்த காரணிகள் குறித்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு ஆராயவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான மூல காரணிகள் கண்டறியப்படாது அங்கு இனங்களுக்கிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என அவர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார். (ச-5)

## தியான கூட்டம்

மலேசியாவிலிருந்து வருகை தரும் சகஜ யோகிகளின் சகஜ யோக தியான கூட்டம் நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு நீராவியடி சைவபரிபாலய சபை மண்டபத்தில் நடைபெறும். வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4 மணிக்கு தியான வகுப்பு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதீபம் விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்ட மும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பழைய மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மகாதீபம் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வடமாகாண கிரிக்கெட் போட்டி

(கிளிநொச்சி)

வடமாகாண ரீதியாக ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி நாளை திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட அணிகள் மோதுகின்றன.

இதில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியானது 15 ஓவர்கள் கொண்டதாகவும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியானது 6 பேர் பங்கேற்கும் 5 ஓவர்கள் கொண்ட போட்டியாகவும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)


**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் வர்த்தக நிலையமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

- கணக்காளர்
- காசாளர்
- பில்கிளார்க்
- களஞ்சியக் காப்பாளர்
- காகிதாதிகள் மற்றும் பத்திரிகைத்தாள் கையாளுநர்

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆங்கில அறிவு மற்றும் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொழிலாளர்கள் தகைமையுடையவர்கள் தமது சுயவிபரமும் தொலைபேசி இலக்கமும் அடங்கிய விண்ணப்பங்களை

விளம்பர இல. சீ-3325
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(C-3325)



**வேலைவாய்ப்பு (Management Trainees)**

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வட மாகாண கிளைக்கு (யாழ்ப்பாணம் /வுவனியா /கிளிநொச்சி /முல்லைத்தீவு) முகாமைத்துவ பயிற்சிக்கு கணிதம், ஆங்கிலம் உட்பட O/L,A/L சித்தியடைந்தவர்கள் தொடர்புகொள்ளலாம். (ஆண்கள் மட்டும்) பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும். பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 50000/= மேல் பெறலாம்.
பயிற்சி காலம் : 3 - 6 மாதங்கள் மட்டும் (5036)

தொடர்புகளுக்கு: 024 4907449,077 7274795



**காணி விற்பனைக்கு**

மாலுசந்தியிலிருந்து அல்வாய் றோட்டில் 300m தூரத்திலுள்ள 'யாதவன் சேவிஸ் சென்றர்' க்குத் தெற்கில் அமைந்துள்ள இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

(சி-3321) தொடர்புகளுக்கு:- 0778452097, 0771547603



**மல்டிமீடியா ஸ்கொலர்ஷிப்**




மல்டிமீடியா புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- மும்மொழிகளிலும் பரீட்சை
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை, இலக்கியம், திரைப்படத்துறை பற்றிய வினாக்கள்
- 60% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்

2D & 3D அனிமேஷன்

விபரங்கள் மற்றும் இலவச பரீட்சை அனுமதிகள் கீழ்க்கண்ட நிலையங்களில்

**ASIAN COMPUTER EDUCATION (PVT) LTD**

| | | | |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-3734088 | 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267 | 192, குருமன்காடு சந்தி, மன்னார் வீதி, வவுனியா T.P : 024-2226050 |



**காணி விற்பனைக்கு**

அளவெட்டி மலவேம்படி சந்தைக்கு முன்பாகவுள்ள றோட்டிலிருந்து 3வது காணி 2 3/4 பரப்பு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0114949234

(5016)



**சித்தா மருத்துவம்**

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், நீரிழிவு, சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அழுக்கம், நெஞ்சுக் குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், மெலிவு, சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை குளோகோமா, இளநரை, வொடுகு போன்ற சகலவிதமான நோய்களுக்கு பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 30ஆம், 31ஆம், 1ஆம், 2ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

தொலைபேசித் தொடர்புக்கு
0777047391,0757390195, 0771005971

Dr.K.சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்,
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(5040)

# அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் சிவதொண்டர் மாநாடு

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்ற சிவ தொண்டர் மாநாடு நேற்று ஆரம்பமாகி இரண்டாவது நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை அமர்வுகள் 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் " சுவாமி விபுலானந்தர் அரங்கில் " செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஆய்வரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்,யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி முரளிதரன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி என். கிருஸ்ணவேணி, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளைகுமரன், யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ந.ஜெயக்குமார், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சு.ராஜேஸ்கண்ணன்,யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முது நிலை விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் ஆகியோர் பல்வேறு தலைப்பில் உரையாற்றவுள்ளனர்.

இன்றைய நாளின் பிற்பகல் அமர்வு 1.30 மணிக்கு கிழக்குப்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சிவஸ்ரீ.ம. கைலாசநாத சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி.சாந்திநாவுக்கரசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து " சிராத்த தீபிகை" என்ற நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலினை அகில இலங்கை இந்து மாமன்ற சமய விவகாரக்குழுத் தலைவர் ஆ.ஜெகதீசன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை இ.எஸ். பேரம்பலம் பெற்றுக் கொள்வார்.

அத்துடன் " பஞ்சபுராண விளக்கம் " என்ற தலைப்பில் திருவாடுதுறை ஆதீனப் புலவர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் சிறப்புரையாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாலை 3 மணிக்கு நடைபெறும் சிந்தனை அரங்கு திருத்தொண் டர் புராணம் கூறும் வாழ்வியல் என்ற பொரு ளில் இடம்பெறவுள்ளது.

இன்றைய் மாலை நேர அமர்வு 5 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் " ஞான வித்தகர் " வினாசித்தம்பி அரங்கில் அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்புரையினை அகில இலங்கை இந்துமாமன்ற சிவத்தொண்டர் அணிக்குழுத் தலைவர் கலாநிதி மு.கதிர்காமநாதன், தமிழ் நாடு பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

## ஆசிரியர்களின் பதவியுயர்வு கடிதங்கள் அனுப்பி வைப்பு

(அல்வாய்)

கடந்த 01.02.2011 இற்கு பின்னர் வலயக் கல்வி அலுவலகங்களினால் வலயக்கல்வி அலுவலகரின் சிபார்சின் பேரில் வடமாகாண கல்வி அமைச்சு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆசிரியர்களின் பதவி உயர்வுக் கடிதங்கள் விரைவில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இப்பதவி உயர்வுக் கடிதங்கள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்தை சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-19)

## வாரம் ஒரு தகவல்

### உபசரிப்பு

"இந்தக்காலத்தில் உங்களைப் போன்ற மனிதர்களைப் பார்ப்பது மிகவும் அபூர்வம் சேர்"

"ஏன் அப்படிச் சொல்கிறீங்க?"

"எப்பொழுது உங்கள் வீட்டிற்கு வந்தாலும் ஏதாவது கொடுத்துச் சாப்பிடச் சொல்கிறீங்க...இந்தளவுக்கு அன்பு செலுத்த யாரால் முடியும்? இப்பொழுது எனக்கு கபீர்தாசர் தான் ஞாபகத்துக்கு வருகிறார்."

"ஏன்"

"ஒரு நாள் கபீர்தாசன் ஒரு ரொட்டித்துண்டையும் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் நெய்யையும் வைத்துக் கொண்டு சாப்பிடப் போகும் தருணத்தில் ஒரு நாய் அங்கே வந்து ரொட்டியைக் கௌவிக் கொண்டு போய்விட்டதாம்"

"அப்படியா? அதன்பின் என்ன நடந்தது?"

"கபீர்தாசன் சிறிதும் தயங்காமல் நெய்க்கிண்ணத்தை கையில் எடுத்துக் கொண்டு அந்த நாயைப் பின்தொடர்ந்து போய்,"பகவானே! ரொட்டித்துண்டு காய்ந்து கிடக்கிறது. நெய்யில்லாமல் சாப்பிட்டால் அது ருசிக்காது. தயவு செய்து இந்த நெய்யையும் சேர்த்துக் கொண்டு சாப்பிட வேண்டும் என்று சொல்லி அந்த நாய்க்கு அதை ஊட்டிவிட்டு தான் பட்டினியாகவே இருந்து விட்டார். அவருக்கு ஞான முதிர்ச்சியால் நாயும் கடவுளாகவே தெரிந்திருக்கிறது"

"அந்த அளவுக்கு ஞான முதிர்ச்சியெல்லாம் நமக்குக் கிடையாது சேர்"

"உங்களுக்கு தன்னடக்கம் அதிகம். அதனால்தான் அப்படிச் சொல்றீங்க. அதனால் எதையும் துல்லியமாக புரிந்து கொள்வேன். உங்களை மாதிரி உபசரிப்பவர்கள் அன்பாக எதைக் கொடுத்தாலும் அது எனக்குத் தேவாமிர்தமாக இருக்கும்"

"அப்படியா சொல்கிறீங்க?"

"ஆமாம். இப்ப கூட பாருங்களேன். இதோ நீங்கள் உங்கள் கையில் கொடுத்திருக்கும் இந்தப் பச்சைத் தண் ணிகூட எனக்கு பாதாம் கீராத் தோன்றுது சேர்.

"அது... பாதாம் கீர்தான்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 12 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பெற்றும் கழகங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்திடம் விண்ணப்பிக்குமாறு கொலின்ஸ் விளையாட்டுக் கழக தலைவர் அறிவித்துள்ளார்.

வடமராட்சியில் சிறந்த 16 அணிகளை தெரிவு செய்து நடைபெறவுள்ள இச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-24)

## இராசி பலன்

29.05.2011
(வைகாசி 15,ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.39 மணிவரை
ரேவதி காலை7.54 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
அக்கினி நாள் முடிவு

**மேடம்** விஷ்ணு வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய் நாள்,குடும்பத்தினர் உங்கள் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் சில பழிச் சொல்லுக்கு உட்பட நேரிடலாம், எதிலும் கோபத்தை குறைப்பது நல்லது.

**மிதுனம்** இனிய செய்தி இல்லம் தேடி வரலாம், பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம், பய ணம் செய்ய போட்ட திட்டம் கைகூடும்.

**கடகம்** ஒளிமயமான வாழ்க்கைக்கு உறுதுணைபுரியும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறதியால் விட்டுப் போன காரியங்கள் இன்று நிறைவேறும், தந்தைவழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும்.

**கன்னி** சஞ்சலங்கள் தீர மாயவரை வழிபட வேண்டிய நாள், தொழிலில் உயரதிகாரிகளை விமர்சிப்பது நல்ல தல்ல, அலைச்சல் அதிகரிக்கும், வரவுகள் வந்தாலும்-செலவுகளும் அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், நண்பர்கள் மூலம் நன்மைகள் பெருகும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** பணவரவு திருப்தி தரும் நாள், பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவர், உடன் பிறப்புக்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர்.

**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், மாமன், மைத்துனர் வழியில் அனுகூலமுண்டு.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற் றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம்,பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பிரயாண நன்மையுண்டு.

**மீனம்** தனவரவு தாராளமாக வந்து சேரும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் முடிவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 90 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 80 | 70 | 70 |
| கரட் | 100 | 60-70 | 90 |
| பூசணி | 40 | 25 | 30 |
| புடோல் | 50 | 30 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 120 | 70 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 50 |
| கரணைக்கிழங்கு | 80 | - | - |
| பயிற்றங்காய் | 60 | 30 | 70 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 |
| பீற்றூட் | 80 | - | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 90 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 |
| போஞ்சி | 100 | - | 80 |
| கத்தரி தம்புள்ள | 40 | - | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 8-10 | 30 |
| தேசிக்காய் | 150 | 140 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 50 |

## கடந்த ஐந்து ஆண்டுகளில்
# அபிவிருத்தி லொத்தர் சபைக்கு 4314 மில்லியன் ரூபா இலாபம்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதிக்குள் அபிவிருத்தி லொத்தர் சபை 4314.10 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியிருப்பதாக சபையில் அறிவித்த நிதி திட்டமிடல் அமைச்சு தற்போது சபையில் 218 ஊழியர்கள் கடமையாற்றி வருவதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வுகளின் போது வாய்மூல விடைக்கான நேரத்தில் ஐ.தே.க. எம்.பி. ரவி கருணாநாயக்கவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திலேயே மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டன.

அதில் மேலும் கூறியுள்ளதாவது, அபிவிருத்தி லொத்தர் சபையில் நிரந்தரப் பணியாளர்களாக 130 பேரும் ஒப்பந்த அடிப்படையில் 14 பேரும் தற்காலிக ஊழியர்கள் என்ற அடிப்படையில் 74 பேரும் என மொத்தமாக 218 பேர் அங்கு கடமை புரிகின்றனர்.

சபையின் கணக்கு அறிக்கைகள் 2005 முதல் 2009 வரையில் பாராளுமன்றத்தில். சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 2010 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இது இவ்வாறிருக்க லொத்தர் சபை கடந்த 2006 முதல் 2010 வரையான 5 ஆண்டு காலப்பகுதியில் 4314.10 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியிருக்கின்றது. அதேபோல் இந்த 5 வருடங்களில் 4141.79 மில்லியன் ரூபாவை சபை அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றது. (ஸ்ரீ-2)

# மோட்டார் சைக்கிள் பன்றியுடன் மோதுண்ட விபத்தில் ஒருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை வீதியில் குறுக்கே ஓடிய பன்றி ஒன்றுடன் மோதிய நபரொருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொண்டைமானாற்றைச் சேர்ந்த சின்னத்துரை பிறேமநாதன் (வயது 41) என்பவரே நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிக்கு மானிப்பாயிலிருந்து தொண்டைமானாற்றுக்குச் சென்ற வேளை விபத்துக்குளாகியுள்ளார்.

அத்தோடு அவருடைய மோட்டார் சைக்கிளும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. (ஸ்ரீ-52)

# விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 100 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படாத விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கே இந் நீர்இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

கிராம சேவையாளர் அலுவலகத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கே நீர்இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன. (2-10)

# சளிப்பரிசோதனை உதவியாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு தெல்லிப்பழை, கொக்குவில், அச்சுவேலி, சங்கானை , கோப்பாய் ஆகிய இடங்களில் இருந்து சளிப் பரிசோதனை உதவியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரத்தில் 6 பாடங்கள் உட்பட விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் வயதெல்லை 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மாதம் ரூபா 19 ஆயிரம் சம்பளமாக வழங்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகத் தேர்வு மார்பு நோய் சிகிச்சை நிலையம் , யாழ்ப்பாணத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறவுள்ளது. இதில் தகுதியானாவர்களில் சேவை மனப்பான்மை உடையவர்களில் 5 பேர் மட்டும் தெரிவு செய்யப்படுவர் என யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.எஸ்.யமுனாநந்தா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# பல்கலை. ஊழியர்களின் சம்பளத்தை நீக்குவதற்கான முயற்சி தோல்வி

(கொழும்பு)

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை நீக்குவதற்கான உயர்கல்வி அதிகாரிகளின் முயற்சி தோல்வி கண்டுள்ளதாக பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குறிப்பிடுகின்றது.


அனைத்து ஊழியர்களினதும் சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு துணைவேந்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக விரிவுரையார்களின் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹுன் மெண்டிஸ் தெரிவித்தார்.

ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு துணை வேந்தர்கள் தயாரில்லை என்பது இதன் மூலம் தெளிவாவதாக அவர் கூறினார்.

இந்த விடயம் குறித்து உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரத்ன தெரிவிக்கையில்,

எவ்வித தாமதங்களும் இன்றி பல்கலைக் கழக ஊழியர்களின் சம்பளத்தை வழங்குமாறு துணைவேந்தர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (2)





கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கிளிநொச்சி வடமாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கே.ரவீந்திரன், வடமாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் ஆகியோர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## பொதுக்கூட்டம்

(மருதங்கேணி)

யா/வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் செ.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நீத்தார் அஞ்சலி, ஆண்டு அறிக்கை, புதிய நிர்வாக சபைத் தெரிவு முதலியன இடம்பெறும். (ஸ்ரீ-35)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திருவருள் மிகு ஸ்ரீ சௌந்தராமிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இப்பெருவிழாவில் நாடு நலமுறவும் வீடு வளமுறவும் பூர்வாங்க கிரியைகள் தொடங்கும் தினமான இன்று காலை 8 மணியில் இருந்து பூரணை தினமான ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரையும் பன்னிரு திருமுறை முற்றோதல் பாராயணம் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர், காரைநகர் சிவநெறித் தொண்டர்களின் அனுசரணையுடன் நடத்த இருக்கும் இப்பன்னிரு திருமுறைப் பாராயணத்தில் மெய்யடியார்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ)

# புலம்பெயர்ந்த விடுதலைப்புலிகளின் ஆற்றலை எளிதாக அடக்கிவிட முடியும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

புலம்பெயர் விடுதலைப்புலிகளுக்கு சொல்லிக் கொள்ளும்படியான ஆற்றல் எதுவும் இல்லையென்றும் அவர்களை எளிதாக அடக்கி விட முடியும் என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே அமைச்சர் விமல் வீரவன்ச புலம்பெயர் விடுதலைப் புலிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் சார்பு நிலை அமைப்புகள் குறித்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் நாடுகளில் செயற்படும் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் மிகமிகக் குறைந்த அதிகாரம் மற்றும் ஆற்றல்களையே கொண்டிருப்பதாகவும் அதனையும் படிப்படியாக இல்லாதொழித்து விட முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் அமெரிக்காவின் ஐ.நா. முன்றலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மிகக்குறைவானவர்களே கலந்து கொண்டனர். அவர்களும் கனடாவில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள்.

கனடாவில் இருந்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை ஏற்றிக் கொண்டு வர அறுபது பேருந்துகள் தயார் செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் ஐம்பது பேருந்துகளுக்கு ஆட்களே வரவில்லை.


அதன் காரணமாக அந்த பேருந்துகளின் பயணம் கைவிடப்பட்டது. எஞ்சிய பேருந்துகளிலும் மிகக் குறைவானவர்களே கொண்டு வரப்பட்டனர்.

இவையெல்லாம் புலம்பெயர் தேசங்களில் விடுதலைப்புலிகளின் சக்தி குறைந்து கொண்டு போவதையே எடுத்துக் காட்டுகின்றது.

அதன் காரணமாக அவர்களை இலகுவாக அடக்கி விடலாம் என்பதை உறுதியாக கூறமுடியும் என்றும் அவர் தன் பேட்டியின் போது குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே அமைச்சர் விமல் வீரவன்ச அமெரிக்கா சென்றிருந்த சமயம் அவர் தலைமையில் இலங்கைக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரின் பாதுகாவலர்களையும் சேர்த்து மொத்தமே இருபதுக்கும் குறைவானவர்கள் மட்டுமே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதைப் பற்றி அமைச்சர் எதுவும் குறிப்பிடாமல் வசதியாகமறந்து விட்டார். (2)








மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கணனி மையக்கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் திருமதி சோ. நிரஞ்சனா கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கணனி வகுப்புக்கள் நடத்துவதையும் படங்களில் காணலாம்.

## ஜேர்மனியின் செனட்டராக யாழ்ப்பாணத்தமிழர் நியமனம்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழரொருவர் ஜேர்மனியில் பொருளியல் செனட்டராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தகல்வல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இயன் கிருகரன் (வயது 72) என்பவர் ஜேர்மனியின் ஹம்பேர்க் பகுதியின் பொருளியல் செனட்டராக நியமனம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறையில் 1939 ஆம் ஆண்டு பிறந்த அவர், 1970 களில் ஜேர்மனிக்கு சென்றிருந்தார். அதற்கு முன்னதாக தனது கல்வியை பிரிட்டனில் நிறைவு செய்திருந்தார். ஜேர்மனியில் ஆரம்பத்தில் கொள்கலன்களை வாடகைக்கு விடும் உலகின் மிகப்பெரும் நிறுவனத்தில் பணியாற்றிய கிருகரன் பின்னர் தனது சொந்த நிறுவனத்தையும் ஆரம்பித்திருந்தார்.

தற்போது ஜேர்மனியில் இயங்கும் பாரிய நிறுவனங்களில் ஒன்றாக மாறி அவரது நிறுவனம் சாதனை படைத்துள்ளது. ஜேர்மனியில் அமைச்சர் நிலைக்கு உயர்ந்து ஈழத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ள கிருகரன் வசிக்கும் ஜேர்மன் நாட்டில் அரை இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சரத்பொன்சேகா சிறையிலிருக்கும் போது போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் அர்த்தமில்லை

### ரவிகருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையில் வாடும் நிலையில் நடத்தும் போர் வெற்றிக் கொண்டாட்டங் களில் அர்த்தமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவிகருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் போன்றவர்கள் சுதந் திரமாக சுற்றித்திரியும் சந்தர்ப்பத்தில் பயங் கரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை வெற்றி கொண்ட சரத்பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு உண்மையான போர் வெற்றி வீரர் சிறையில் அடைக்கப்பட்டு கொண்டாடப்படும் வெற்றிக் கொண்டாட்டங்களில் அர்த் தமில்லை எனவும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு நியாயமும் பயங்கரவாதத்தை இல்லாதொழித்தவர்களுக்கு இன்னொரு நியாயமும் நாட்டில் அமுல் படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலையில் ஜனநாயகம் மற்றும் நீதி பற்றி எவ்வாறு பேசுவது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஸ்ரீ-2)

## எகிப்திய வெளிவிவகார அமைச்சருடன் அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தோனேசியாவக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எகிப்தின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நபீல் அல்.அராபியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ் எகிப்திய வெளிவிவகார அமைச்சருக்கு விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மீள்கட்டுமான பணிகள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் விளக்கியுள்ளார்.

இதேவேளை, எகிப்தின் அண்மைய அரசியல் மற்றும் அரசியலமைப்பு முன்னேற்றங்கள் தொடர்பில் இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் விரிவாக கலந்துரையாடியதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அணிசேரா நாடுகளின் அமைப்பில் இடம்பெற்றுள்ள மேலும் பல நாடுகளின் பிரதி நிதிகளை அமைச்சர் பீரிஸ் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் பீரிஸ் அங்கிருந்தவாறே இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## இலங்கையர்கள் மோசடியான முறையில் மலேசியா செல்வதை தடுக்க நடவடிக்கை

இலங்கைப் பணிப்பெண்கள் மோசடியா ன முறையில் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதனைத் தடுக்கும் நோக்கில் நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் பெருமளவிலான இலங்கையர்கள் மலேசியாவிற்கு செல்வதனால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

மலேசியாவிற்கான இலங்கை தூதுவராலய அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகள் கூட்டாக இணைந்து மலேசிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கையர்களுக்கு மலேசிய விசா வழங்கப்பட வேண்டுமாயின் குறித்த நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் சுவரொட்டி ஒட்டியதாக கைதான எழுவர் விடுவிக்கப்பட்டனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட லலித்குமார் வீரராஜு உள்ளிட்ட ஜே.வி.பி.யின் ஆதரவாளர்கள் 7 பேரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

தமது கட்சி ஆதரவாளர்களை கைது செய்வதனால் அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை மீறப்படுகிறது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இவர்களின் கைது குறித்து முன்ன தாக ஜே.வி.பி. அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. ஜே.வி.பி. யின் ஆதரவாளரான லலித் குமார் வீராரஜு உள்ளிட்ட 7 பேர் கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் வைத்து இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பின்னர் கிளிநொச்சி பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டனர். தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க, சரத்பொன்சேகாவை உடன் விடுதலை செய்க, அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்குக, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துக ஆகிய வசனங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் ஆதரவாளர்களை கைது செய்வதனால் அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை மீறப்பட்டுள்ளது. இதேவேளை, சுவரொட்டிகளை ஒட்டுவது சட்ட விரேரதமான செயல் அல்ல. சுவரொட்டிகளை ஒட்டும்போதே எமது ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர். இது சட்டவிரோதச் செயல் என்பதுடன் ஜனநாயகத்துக்கு எதிரான செயலுமாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


60 ஆவது பிறந்ததின வாழ்த்து

சின்னத்துரைக் குருக்கள்

பிறைசூடிக்குரு



அன்று ஈசுரவிநாயகரினால் சூட்டப்பட்ட பிறைசூடிக்குரு என்ற நாமத்தின் அனுக்கிரகத்தோடு இன்று 29.05.2011 இல் 60 ஆவது அகவையில் காலடிவைக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியரான சின்னத்துரைக் குருக்கள் பிறைசூடிக்குரு அவர்கள் மக்களால் வழங்கப்பட்ட "சோழியூரான்", "சக்தி கிரியா வித்தகன்", "சிவஞான கலாபமணி", "ஈசுவர விநாயகரின் தொண்டன்" என்ற பட்டங்களிற்கமைய தனது ஆன்மீக பாதையிலே சென்று கொண்டிருக்கும்

இவ்வேளையில் மேன்மேலும் அவரது பணிகள் தொடர நீடூழிவாழ வேண்டுமென்று ஈசுர விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்.

மனைவி,
பிள்ளைகள்.

பறாளாய்,
சுழிபுரம்.

(5033)

# உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலம்; நிதியமைச்சின் செயலர் விளக்கமளிப்பு

அரசாங்கம் விரைவில் அமுல் படுத்த திட்டமிட்டுள்ள தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்ட ஒருவர் 50 வயது முதல் 60 வயதுக்கு உட்பட்ட காலத்தில் மரணமடைந்தால் அவரது மனைவிக்கு அவர் செலுத்திய ஓய்வூதியத் தொகையில் 60 சதவீதம் சேமிப்பு வழங்கப்படும்.

அதேவேளை, 60வயதைத்தாண்டிய பின்னர் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருப்பவர் மரணமடைந்தால் அவருக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அவரது மனைவிக்கோ குடும்பத்தாருக்கோ கொடுக்கப்பட மாட்பாது என நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்தர தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியம் பற்றிய கருத்தரங்கில் பங்கு கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,



தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தவராக சேர்ந்து கொள்ளும் ஒருவரின் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சம்பந்தப்பட்ட அங்கத்தவர் இச்சலுகைகளை தொடர்ந்து வழமைபோல் பெற்றுக் கொள்ள முடியும்.

தனியார் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட ஒருவர் 57 வயதில் இளைப்பாறினாலும் 60 வயதைப் பூர்த்தி செய்த பின்னரே அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

உத்தேச சட்டத்தின்படி 50 வயதுக்கு குறைவான தனியார்துறை ஊழியர்கள் கட்டாயம் இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டுமென்றும், 50 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் விரும்பினால் மாத்திரமே இத்திட்டத்தில் சேர்ந்து 60 வயதாகும்போது இளைப்பாறினால் அவருக்கும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயனடைய முடியும்.

தனியார் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒருவர் 10 ஆண்டு காலம் சேவையைப் பூர்த்தி செய்த பின்னரே ஓய்வூதியம் பெறும் தகுதியைப் பெறுகிறார். ஆனால் ஒருவர் 7 ஆண்டுகளை பூர்த்தி செய்த பின்னர், சேவையில் இருந்து இளைப்பாறும் சந்தர்ப்பத்தில், அவர் எஞ்சிய 3 ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளை தமக்கு கிடைக்கும் ஊழியர் சேம லாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிக்கொடையில் இருந்து மீதி மூன்று ஆண்டுகளுக்கான முழுத் தொகையையும் செலுத்திய பின்னர் ஓய்வூதியத்தை 60ஆவது வயதில் பெறும் தகுதியை அடைவர்.


உத்தேச ஓய்வூதியத் திட்டத்திற்கு ஊழியர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தின் 2 சதவீதத்தையும், அவர் பணியாற்றும் நிறுவனம் அவ்விதம் 2 சதவீதத்தையும் மாதாந்தம் செலுத்தவேண்டும் .

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் மூன்று வெவ்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஒருசாரார் தனியார்துறை நிறுவனமொன்றில் தொழில் புரிபவர்கள், இரண்டாவது பிரிவினர் வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர். மூன்றாவது பிரிவினர் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களாவர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் 2 மாதங்களுக்குள் உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தொழில்உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உத்தேச சட்ட மூலத்திற்கு எதிராக எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை கவனிக்கத்தக்கது.



தேசிய சேமிப்பு வங்கியின் 2010ஆம் ஆண்டுக்கான நிதியறிக்கையை வங்கியின் தலைவர் பிரதீப் காரியவசம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதையும், அருகில் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி எச்.எம்.எச்.பண்டாரவையும் படத்தில் காணலாம்.

தேசிய சேமிப்பு வங்கி 2010ம் நிதியாண்டில் முதல் காலாண்டில் வரிக்கு முந்தைய இலாபமாக 11 சதவீத அதிகரிப்புடன் ரூ.3.2 பில்லியனையும், வரிக்கு பிந்தைய இலாபமாக ரூ.1.9 பில்லியனை (அதாவது 66% அதிகரிப்பு) பதிவு செய்துள்ளது.

# சிங்கர் நிறுவன காலாண்டு வருமானம் 38% அதிகரிப்பு

சிங்கர் சிறிலங்கா குழுமம் 2011 இன் முதல் காலாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி 2011இன் முதல் காலாண்டிற்கான வருமானம் ரூ.5 பில்லியனைத் தாண்டியுள்ளது. முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியில் பெறப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 38 % அதிகரிப்பாகும்.

இது குறித்து சிங்கர் சிறிலங்கா குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் தெரிவித்ததாவது,

உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் காரணமாக தொலைக் காட்சிகளுக்கான கேள்வி அதிகரித்தது. நாம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி

SINGER
AT HOME WORLDWIDE

பல புதிய மாதிரி கணனிகள்; தொலைக்காட்சிகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தி கவர்ச்சியான விற்பனைத் திட்டங்களை மேற்கொண்டோம். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் தொலைக்காட்சியின் விற்பனை 93 % அதிகரித்தது. அத்துடன் குறிப்பாக சொல்வதானால் எமது சகல பொருட்களின் விற்பனையும் அதிகரித்தது. இந்த வருமான வளர்ச்சியின் பயனாக கம்பனியின் இலாபத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.09 | 110.77 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 178.44 | 182.62 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.83 | 158.09 |
| சுவிஸ் பிராங் | 125.42 | 129.89 |
| கனேடிய டொலர் | 110.72 | 114.55 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.38 | 119.20 |
| சிங்கப்பூர் டொலர் | 87.48 | 90.05 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.43 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.91 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# திருகோணமலை -சென்னை இடையே சொகுசு கப்பல் சேவை

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் திருகோணமலைக்கும் சென்னைக்குமிடையே சொகுசு கப்பல் சேவையொன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக, இக்கப்பல்சேவைக்கான முகவராக நியமிக்கப்பட்டுள்ள அறுகம்பை டரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.ஜவ்பர் கூறியுள்ளார்.

இக்கப்பல் சேவை வரும் 4ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் இருந்து சென்னைக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். பின்னர் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் சென்னையிலிருந்து திருமலைக்கும், ஒவ்வொரு வியாழக்கிழமையும் திருமலையிலிருந்து சென்னைக்கும் புறப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இக்கப்பல் 9 மாடிகளைக் கொண்டுள்ளதோடு 268 சிறு அறைகளும் 750 சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்யக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது. அத்துடன் இன்னும் பல பொழுது போக்கு அம்சங்களையும் இக்கப்பல் உள்ளடக்கியுள்ளது எனத் தெரிவித்தார்.

### தாமதமாகிவரும் கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை

கொழும்பு -தூத்துக்குடியிடையேயான கப்பல் சேவை ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் கூறி பிற்போடப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடைசியாக தற்போது



அடுத்துவரும் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது. இதில் கப்பல் சேவை ஆரம்பிப்பதற்கான தினம் தீர்மானிக்கப்படலாம். இக்கப்பல் சேவைக்கான முகவர்களாக ஏழு கம்பனிகள் நியமிக்கப்பட்டுள்ளன.

### சென்னையிலிருந்துகடல் வழி சுற்றுலா அறிமுகம்

சென்னையிலிருந்து கடல்வழி சுற்றுலாவை அமெட் ஷிப்பிங் இந்தியா நிறுவனம் அறிமுகம் செய்கிறது. இது குறித்து நிறுவனத்தின் தலைவர் இராமச்சந்திரன் கூறியதாவது,

வெளிநாட்டு சுற்றுலாக் கப்பல்கள் மிகச்சிலதான் இந்திய, இலங்கைத் துறைமுகங்களை தொட்டுச் செல்கின்றன. இதைக்கருத்தில் கொண்டு எமது நிறுவனம் ஒரு பயணத் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி முதல் கட்டமாக லட்சதீவு, அந்தமான், கொழும்பு போன்ற சுற்றுலாப் பகுதிகளுக்கு ஒரு நாள் முதல் ஒரு வாரம் வரை சென்று வரலாம். இதுதவிர கப்பல்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டு நிகழ்ச்சிககைளை நடத்தவும் அனுமதிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7479.63 | 7459.58 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6879.99 | 6875.54 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 15,394.59 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* சிடிஜசி (404.20),டுன்மிஸ் கப்பிரல்(24.90), செரண்டிப் லான்ட்(1700.00),கொழும்பு லான்ட்(35.70), சிஎப்ரி(11.20).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஈஸ்ரன் மேர்ஷன்ட்(1525.00),போகல கிரபைட்(65.30),ஓட்டோரூம்(910.10),அலுபாப்(107.10),ஏசியன் அலைன்ஸ்(127.20).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# முல்லைத்தீவில் செலான் வங்கி கிளை திறப்பு

செலான் வங்கியானது தனது 97ஆவது கிளையை கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு நகரில் திறந்து வைத்துள்ளது. இது வடக்கு கிழக்கில் திறக்கப்படும் வங்கியின் 7ஆவது கிளையாகும்.

செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கிளையினை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரி கபில ஆரியரத்னவும் கலந்துகொண்டார்.

# இந்திய - ஆபிரிக்க வர்த்தகம்

இந்தியா–ஆபிரிக்கா இடையிலான பரஸ்பர வர்த்தகம், வரும் 2015-ம் நிதியாண்டில், 3 இலட்சத்து 22 ஆயிரம் கோடி இந்திய ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தற்போதைய வர்த்தகம் 2 லட்சத்து 11 ஆயிரத்து 600 கோடி இந்திய ரூபாயாகவுள்ளது.

உலகின் இரண்டாவது பெரிய கண்டமாக விளங்கும் ஆபிரிக்காவுடன் வர்த்தக உறவை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் இந்தோ–ஆபிரிக்க கழகத்தின் மாநாடு எதியோப்பியாவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இந்தியா, ஆபிரிக்காவின் வளர்ச்சிக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர் (ரூ.55 ஆயிரம் கோடி ரூபாய்) உதவி வழங்குவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்காவில் அடிப்படைக் கட்டமைப்பு, மின்சாரம், வேளாண்மை, உணவு பதப்படுத்தல், பொறியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான வர்த்தக வாய்ப்பு உள்ளது.

# ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையை அவுஸ்திரேலியாவும் வரவேற்க வேண்டும்

## அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா. நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கையை அமெரிக்கா, பிரித்தானியா போன்று அவுஸ்திரேலியாவும் வரவேற்க வேண்டும் என்று அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி டெனிஸ் ஜென்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

டக்னி தொகுதியைச் சேர்ந்த தமிழ்மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்றத்தில் இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக கடந்த 26 ஆம் திகதி அவர் தெரிவித்திருந்தார்.

அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் டெனிஸ் ஜென்சன் நாடாளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2009 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த போர் பற்றி ஐ.நா.செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுபற்றி எனது தொகுதியிலுள்ள தமிழ் மக்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். போரில் ஈடுபட்ட இரு தரப்பும் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் அனைத்துலக சட்ட விதிகளை மீறியிருப்பதாக இந்த அறிக்கை கூறுகின்றது.

இவை போர்க்குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இட்டுச் செல்லத்தக்கவை.

இலங்கை அரசாங்கம் பொது மக்களின் பகுதிகளில் கனரக கருவிகளைப் பாவிப்பதில்லை எனக் கூறிய பின்னரும் மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் நோக்கில் பாதுகாப்பு வலயத்திலுள்ள மூன்று வலயங்களில் கடுமையான எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இது தனிமனித பாதுகாப்பு பற்றி அனைத்துலக விதிகளை மீறும் செயற்பாடாகும்.

இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு நடு நிலையற்றது எனவும் இந்த ஆணைக்குழு நீதியான உண்மையைக் கண்டறியும் வகையில் தனது விசாரணைகளை மேற்கொள்ளவில்லை எனவும் இந்த நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் நடந்தவை பற்றி இந்த ஆணைக்குழு ஆராயவில்லை.

அனைத்துலக சமூகம் பொது மக்களைப் பாதுகாக்கத் தவறியிருப்பதும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இதனை ஏற்றுக்கொண்டுள்ள ஐ.நா. செயலாளர் பான் கீ மூன், ஐ.நா. சபையும் பொதுமக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கின்றார். இதுபற்றி ஐ.நா. ஆராயவுள்ளது.

அவுஸ்ரேலியா உட்பட அனைத்துலக சமூகம் லிபியா, பர்மா, பிஜி மற்றும் சிம்பாவே போன்ற நாடுகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் விடயங்களில் கவனம் செலுத்தியது போன்று இலங்கை விடத்தில் செயற்படவில்லை.

இந்த நேரத்தில் அவுஸ்திரேலியா போர்க்குற்றம் பற்றியும் மனித உரிமை மீறல் தொடர்பாகவும் ஆழமாவும் ஆக்கபூர்வமாகவும் அனைத்துலக மனிதகுல சட்டத்திற்கு அமைவாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரித்தானியா , அமெரிக்கா போன்ற நாடுகள் உட்பட அனைத்துலக நாடுகள் பல ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை வரவேற்றுள்ளன.

அறிக்கையை பகிரங்கமாக வெளியிட்டதற்கு இந்த நாடுகள் நன்றி கூறியுள்ளன. இதேபோன்று பகிரங்க அறிவிப்பு ஒன்றை அவுஸ்திரேலியாவும் வெளியிட வேண்டும். அவ்வாறு வெளியிட்டால் அது இங்குள்ள நீதி கேட்கும் தமிழ் மக்களை ஒன்றிணைத்து அமைதிக்கான பாதையை நோக்கி வழிநடக்க வழிகோலும் .இது இலங்கையிலுள்ள மக்களுக்கும் அமைதியைக் கொடுக்கும் என்று தெரிவித்தார்.(ஶ்ரீ-2)

# மெய்வல்லுநர் பயிற்சி முகாம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலய கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் மெய்வல்லுநர் பயிற்சி முகாம் ஒன்று நாளை திங்கட்கிழமை வட்டக்கச்சி மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி முகாமில் கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் போட்டியின் இறுதிப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு மற்றும் 21 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.விஸ்ணு தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)


"புகைப்படக்கலைஞர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."

அண்மையில் அறிமுகபடுத்தப்பட்ட...
KODAK ROYAL Luminous Digital Paper
KODAK Photo Book Paper என்பன
இன்று முதல்
எம்மிடம் 12X36 வரையிலான
அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
துரித சேவைக்கு...
பிரியங்கா
டிஜிட்டல் கலர் லாப், புகைப்பட கலையகம்.


பருத்தித் துறை வீதி, நெல்லியடி. 0094 21 226 2737

மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

திருவாளர் சபாபதி குகதாசன்

அவர்கள் S.L.T.S.- I





நேற்றைய தினம் (28.05.2011) தன்னுடைய பணிநயப்பு பாராட்டு விழாவினை வெகுவிமரிசையாகக் கொண்டாடிய திருவாளர் சபா-குகதாசன் அவர்களை மேலும் பல சீரும் சிறப்புக்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் தன் குடும்பத்தாருடன் நோய் நொடியின்றி வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புடன்

மாணவனும் ஆசிரியருமாகிய
திரு. வன்னிமரம் - அரவிந்தன்
B.A(Hons) 2nd upper(political Science Special)

இரா.அகிலன்
(மாவட்ட இணைப்பாளர்,
இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை)

(5029)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### உதிர்வு

தலைவாரிப் பூச்சூடிய மங்கை
குங்குமப் பொட்டோடு
வலம் வந்தவள்
நெஞ்சத்து குழைவோடும்
வதனப் பொலிவோடும்
பூரித்து இருந்தவள்
இன்று வெள்ளைச்சேலையுடனும்
பாலைவனத்து நெற்றியுடனும்
பரிதவித்து இருக்கின்றாள்
ஓலைவீட்டு திண்ணையில்...
அன்று குடும்ப பண்ணையில்
மிக மகிழ்ந்திருந்தவள்
அவளது அழகான முற்றத்தை
குண்டும் குழியுமாக்கி இருக்கிறது
அந்த யுத்தம்

ஆ.முல்லைதிவ்யன், பொலிகையூர்

### மௌனம்

உன் மௌனம்
அழகானது தான்
எனினும் உதிரும்
ஓரிரு வார்த்தைகளுக்காக
காத்திருக்கிறேன்
மிட்டாய் பார்க்கும்
குழந்தையின் ஆர்வத்தோடு

ப.சுஜிர்தா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி

### பயணங்கள் முடிவதில்லை

விளையாட்டாய் போகட்டும்
விட்டுத்தள்ளு
உன் விதிதானே எல்லாம் என்று
மறந்து விடு
சுடுகின்ற நெருப்புத்தான்
இறுதியிங்கே
சுடலையிலே கொள்ளிதான்
முடிவு அங்கே
வாழ்க்கைப் பயணம்
தூரமடா
வாழ்ந்துபார் அது
பாரமடா

இரா-நவதர்சினி
வயாவிளான்

### காத்திருப்பு...

வெண் கட்டியின்
வெளிப்பாடு
கருமை நிற
பலகையினால் தானே?
நிலவின் ஒளி துலங்குவதும்
இருளில் தானே?
அதனால் தான்
காத்திருக்கிறேன்
நல் ஆசானாய்
வருவதற்காய்...

செ.அன்னதாரகை
யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி

### அவரவர் பார்வையில்

**தாய்**
எம் வாழ்வின் கண்கண்ட
தெய்வம்
உயிர் கொடுத்த எம்
கடவுள்
**பாடல்**
எம் துன்பங்களைத் தீர்க்கும்
மனதுக்கு மகிழ்வைத் தரும்
அற்புத பரிசு
**அழுகை**
துன்பங்களை தீர்த்து
மனதிற்கு இன்பத்தைக்
கொடுக்கும் கொடை

சி.நித்தியா
நாகர் கோவில்

**பெருமை...**
என் முற்றத்து
மலர்கள் அனைத்தும்
என்னவள் கூந்தலில்
சூடியபின்பு
அம் மலர்களிற்கே
பெருமை....

ஆர்.பரமேஸ்
துன்னவையூர்

### என் காதல் மன்னன்

இவன் அமாவாசை தினத்தில்
பிறந்திருந்தாலும்
இவன் வானில் உள்ள
சந்திரனைவிட...
விண்ணில் பிரகாசித்து
கொண்டுள்ள
இவனின் அழகைக்கண்டு
பொறாமை கொள்ள
வானில் ஆயிரம்
விண்மீன்கள் காத்துக்
கொண்டிருக்கின்றன
நீ என் காதல் மன்னன்
என்பதை அறியாமல்

எஸ்.துஷாங்கி
நெல்லியடி

### விடியல் எப்போது?

ஏன் இந்த சோகம்?
பள்ளி செல்லும் பருவத்திலே
அடுப்பிற்கு முன் இருத்தி
விட்டார்கள் என்றா?
அல்லது
பெண்ணுரிமை இன்னும்
கிடைக்கவில்லை என்றா?

சி.ரேகா,
கம்பர்மலை

### இமயம் தொட...

என்னால் தான்
என்னால் தான்
என மார் தட்டுகிறாயே
எது உன்னால் நிறைவேறியது
அதன் தொடக்கம் எங்கே?
முடிவைக் கண்டுவிட்டாயா?
உன்னை நீ உணர்வாயாயின்
உலகைப் புரிந்து கொள்வாய்
எல்லாம் அவன் செயல்

மாவை. நா.கஜேந்திரா

### தவிப்பு



என் மனதில் எழுதி வைத்த
வரிகள் உன் ஞாபகம்
என் மூச்சின் சுவாசக்காற்று
உன் இனிய கானங்கள்
என் தூங்காத விழிகள்
உன் நிழல் படங்கள்
என் சந்தோசம்
உன் கல்லறைக்குள்
கரைந்து விட்டது

க.செல்வமலர்
இடைக்காடு

### ஏமாற்றம்

காலையில் மலரும் பூக்கள்
மாலையில் உதிருகின்றன
என் மனதில் பூத்த நீயோ
ஈரேழு நாட்களில்
கல்லறைக்குள் உதிர்ந்து விட்டாயே
மலருமா என் கல்லறைப் பூ

க.செல்வா
சிறுவர் இல்லம், திருநெல்வேலி



## மௌனத்தின் தேடல் – 72

### நிழலானதே!

அடுக்கு பண்ணி
ஆகாரத்தை ஆக்க
அடுக்களை இல்லை
ஆக்கிய உண்டியை
எடுத்து வைக்க எமக்கு
அகமே இல்லை

நா.சசிகலா
நாவற்குழிதெற்கு

### விதி

ஆக்கிய சோற்றினை
ஆசையுடன் ஊட்டுமுன்
காலனின் கைகளில்
கைதானாளோ அன்னை!

றாபி விமலதாஸ்
நவாலி

### நீயும் நிலவோ?

கல்விப்பசி தீர ஆர்வமுடன்
வளர்ந்த முழுநிலவு-இன்று
வயிற்றுப்பசி தீர்க்க முடியாது
அரைநிலவாய் தேய்வதேனோ?

என்.துசி

### வறுமை

எல்லாமே மாறி
வரும் இவ்வுலகில்
இந்த ஏழைகளின்
வறுமை மட்டும்
இன்னமும் ஏனோ
மாறவில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### ஞாபகம் வருதே!

பார்த்தவுடன் சிறுவயதில்
விளையாட்டு சோறு, கறி
சமைத்த ஞாபகம்!
இந்த சிறுமியோ,
நிஜமாய் சமைக்கின்றாள்
வயிற்றுப் பசிபோக்க...

சியா,கொக்குவில்

### நினைவு...

ஆறாத் துயரோடு
ஆண்டு பல கடந்தாலும்
மீளாத்துயரோடு
மீட்டிப்பார்க்கும்
நீங்காத நினைவுகள்...!

ஆர்.ஜெயா
அராலி

### ஏக்கம்

உறவுகளை இழந்து
ஊன் உறக்கம் மறந்து
நொந்துவெந்த மனத்தோடு
ஆக்கிய உணவைக் கூட
அருந்தாது ஏக்கத்துடன்
யார் வரவைப் பார்க்கின்றாய்

துரை, தென்மட்டுவில்

### பாலகியின் நிலை

பள்ளிப் பருவமதில்
பாடம் பயிலாமல்
பானையை ஏற்றி
பரிதாபப்படுகின்ற
பாலகியின்
நிலையைப் பாரீர்!

பு.ஜீவனா, கரவெட்டி

### யார் தந்தார்?

அன்புகாட்டி சோறூட்டிய
அன்னையுமில்லை
அரவணைத்து தோளில் தூக்கிய
தந்தையுமில்லை!
அநாதரவாய் வீதியிலே...
அகதி என்ற பட்டமுனக்கு
யுத்தம் தந்ததோ?

சுஜா,
கொக்குவில்

### தகுமா?

பள்ளிப் பெண்ணாக
கையில் புத்தகத்தை
ஏந்தும் வயதில்
பானைக்கும் காவல் ஏன்?

சி.ஷானுகா
யாழ்ப்பாணம்.

### எடுத்துக்காட்டு

எத்தகைய இடரினிலும்
தயங்காது தனித்து நின்று
தன் கருமமாற்றும்
இச் சிறுமியின் துணிவும்
தன்னம்பிக்கையும் எமக்கு
நல்லதோர் எடுத்துக்காட்டு

ஆராதனா
மட்டுவில் தெற்கு

### கலங்காதே

தாயகத்து தங்கையே
எம் தலையெழுத்து
தரையிலே சமைத்து
பாத்திரங்களுக்கும் காவலா
யோசிக்காதே
மன உறுதியுடன் இரு
நம்பிக்கைதான் வாழ்க்கை!

மு.அருமைச்சந்திரன்
கறுக்காய்

### எதிர்பார்ப்பு

சமைப்பதற்கு இடமில்லை
சாப்பாட்டுக்கு வழியில்லை
பெற்றோரும் எனக்கில்லை
கல்விகற்க முடியவில்லை
அகதி முகாம் வாசலிலே
காத்திருக்கிறேன்
கர்த்தரே வழிகாட்டுவாயா?

க.செல்வமலர்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 73

**அன்பு வாசகர்களே !**





உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.06.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -






கிளிநொச்சி வலய பாடசாலைகளில் நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளில் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி மகா வித்தியாலய 17 வயது பிரிவு ஆண்கள் அணியினரையும் 19 வயது பிரிவு பெண்கள் அணியினரையும் அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# அணிசேரா நாடுகள் பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்வதற்கு முயல வேண்டும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

அணிசேரா நாடுகள் பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்ள வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அணிசேரா நாடுகளின் 16 ஆவது வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக பயங்கரவாத ஒழிப்பு உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் அணிசேரா நாடுகள் உலக அரங்கில் முக்கிய பங்களிப்பை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அணிசேரா நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் அமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் விளக்கமளித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# வடமாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி இவ்வருடம் அதிகரிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவு இந்த வருடம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த வருடம் வட மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 14.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் மாகாண மட்டத்திலான மொத்த உள்நாட்டு உற்பத்திச ளின் அளவில் இரண்டாம் நிலை என தொிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு அதிக மொத்த உள்நாட்டு உற்பத்தி பதிவாகியுள்ளது. அங்கு 14.4 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் அந்த மாகாணங்களின் அபிவிருத்திகள் துரிதமாக முன்னேற்றம் காண்பதாக மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கனமழை காரணமாக நாட்டின் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளம்

கனமழையினால் நாட்டின் சிலபகுதிகளில் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் களுகங்கை - களனி கங்கை- நில்வள கங்கை மற்றும் கிங்கங்கை ஆகியவற்றின் நீர்மட்டங்கள் தொடர்ந்தும் உயர்ந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கேகாலை – கொட்டியகும்புர படகல் தெனிய வீதி நீரில் மூழ்கி உள்ளதாகவும் சுமார் 20 வீடுகள் பகுதியளவில் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளதாகவும் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் காலி மாவட்டத்தில் தவளம மற்றும் ஹினிதும ஆகிய பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக காலி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய ஒருங்கமைப்பாளர் அசித்தரணசிங்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகளின் முன்னாள் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

புலிகளின் முன்னாள் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளராகச் செயற்பட்ட சிவசுப்ரமணியம் வரானந்தன் எனப்படும் பதுமனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் இராணுவத்தினரை படுகொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பதுமனை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

எதிர்வரும் ஜுலை மாதம் 26 ஆம் திகதி வரையில் பதுமனை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை உயர் நீதிமன்ற நீதிவான் தபகேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் தொடர்ந்தும் விசாரணை நடத்த அனுமதியளிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஸ்ரீ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

அமரர் கலாநிதி சோமசுந்தரம் கிருஷ்ணராஜா
நினைவுப் பேருரை

**"பல்வகைகள் ஒன்று சேர்தல்"**

*(19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத் தமிழர் மத்தியில் உருவான கலை இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளுதல்)*

**"Assemblage of Multiplicity"**

(understanding the process of Arts and Culture Of SriLankan Tamils after 19th Century through some selected figures)

பேருரை வழங்குநர் : கலாநிதி சி.மௌனகுரு
முன்னாள் பீடாதிபதி, கலைப் பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்.

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

திகதி: 30.05.2011 திங்கட்கிழமை.

நேரம்: பி.ப. 03.00 மணி.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-3311) பதிவாளர்


# யாழ்ப்பாணத்தில் சுத்தமான குடிநீர் விநியோகம் அவசியமானது

## ஆய்வில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுத்தமான குடி நீர் விநியோகம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஆய்வுத் தகவலொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட 25 நிறுவனங்கள் கூட்டாக இணைந்து ஆய்வு நடத்தியுள்ளன.

வீடமைப்பு, குடியேற்றங்கள், சுற்றுலாத்துறை, கைத்தொழில்துறை போன்றவற்றுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் அவசியமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் உட்கட்டுமான வசதிகளை விருத்தி செய்தல், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற நடடிக்கைகள் குறித்தும் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நபரொருவர் கடந்த 25 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸாரால் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த சாரதி நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிபதி மா.கணேசராசா, 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் இரண்டு மாதகால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-29)

# லிபிய ஜனாதிபதி கடாபி பதவி விலக வேண்டும்

## ஜி 8 நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்து

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என ஜி8 நாடுகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரான்சில் நடைபெற்ற ஜி8 உச்சி மாநாட்டில் பங்குபற்றிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கடாபி பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

கேணல் கடாபியின் படைகளுக்கு எதிராக நேட்டோ தாக்குதலை விமர்சித்து வந்த ரஷ்யாவும் இப்போது கடாபி பதவி விலக வேண்டும் எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவை ஆட்சி செய்வதற்கான நியாயபூர்வத் தன்மையை கடாபி இழந்து விட்டார் என ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவ் தெரிவித்துள்ளார். லிபியா ஒரு சுதந்திரமான நாடாக நீடிக்க வேண்டும் என ரஷ்யா விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கடாபியை பதவி விலகச் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க ரஷ்யா தயார் என ரஷ்ய பிரதி வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி ரியாப்கோவ் தெரிவித்துள்ளார்.


(ஸ்ரீ-2)



அபிவிருத்தி அடைந்த நாடுகளின் உச்சிமாநாடு (ஜி-8) பிரான்ஸ் நாட்டில் ஆரம்பமானது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா (இடது) , ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் (நடுவில்), பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஸி ஆகியோர் கலந்து கொண்டனர்.




# பொஸ்னிய போர்க்குற்றவாளி சேர்பியாவின் வடபகுதியில் கைது



பொஸ்னியாவில் இடம்பெற்ற படுகொலைகளில் நெருங்கிய தொடர்புடையவரும் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவருமான ஜெனரல் ரட்கோ மிலாடிக் சேர்பியாவின் வடபகுதியில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக தலைமறைவாக வாழ்ந்து வந்த இவர் கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சேர்பிய ஜனாதிபதி போறியஸ் ரடிக் உறுதிப்படுத்தியுள்ளார்.

1995 ஆம் ஆண்டு ஸ்றீபிறெனிகாவில் இடம்பெற்ற மிகப்பெரிய மனிதப்படுகொலையில் இவர் முக்கிய பங்கு வகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இதன் போது சுமார் 7 ஆயிரத்து 500 பேர் வரையில் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொஸ்னிய போர்க்குற்றங்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டு ரடோவன் கரடிக் கைது செய்யப்பட்டதன் பின்னர் அந்நாட்டின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட முக்கிய நபர்இவர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் தனது பதவிக் காலத்தில் இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களைப் புரிந்ததாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இவர் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் போர்க்குற்றவிசாரணைகளின் போதும் இவர் போர்க்குற்றவாளியாக இனங்காணப்பட்டிருந்தார்.

2001 ஆம் ஆண்டு முன்னாள் யூகோஸ்லாவிய ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசேவிக் கைது செய்யப்பட்டதைக் தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# பாகிஸ்தானுடன் தொடர்ந்தும் நெருங்கிய தொடர்பு பேணப்படும்

## அமெரிக்கா தெரிவிப்பு

பாகிஸ்தானுடன் தொடர்ந்தும் நெருங்கிய தொடர்பு பேணப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.அமெரிக்காவின் இராஜாங்கச்செயலாளர் ஹிலாரி கிளின்டன் பாகிஸ்தானுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் மறைந்திருந்தமை தொடர்பில் அந்நாட்டின் சிரேஷ்டத் தலைவர்கள் அறிந்திருந்தமைக்கான எவ்வித ஆதாரங்களும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாதத்தை இல்லாதொழிக்கும் முயற்சிகளுக்கு பாகிஸ்தானின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது எனவும் பாகிஸ்தானின் பங்களிப்பின்றி ஆப்கானிஸ்தானில் சமாதான முனைப்புக்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அல்கொய்தா இயக்கத் தலைவர் பின்லேடன் கொல்லப்பட்டதனைச் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்பட்டிருந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகளையும் நோக்கில் ஹிலாரி கிளின்டன் பாகிஸ்தானுக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஹிலாரி கிளின்டன் பாகிஸ்தானின் முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஒசாமா பின்லேடன் கொலை திரைப்படமாகின்றது

(லொஸ்ஏஞ்சஸ்)

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒசாமாபின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் ஹொலிவூட்டில் திரைப்படமாக விரைவில் எடுக்கப்படவுள்ளது.

ஹொலிவூட்டின் மிகவும் பிரபலமான கொலம்பியா பிக்சர்ஸ் என்ற திரைப்பட நிறுவனம் தான் இந்த திரைப்படத்தை எடுக்கவுள்ளது.

பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் கடந்த 2 ஆம் திகதியன்று பாகிஸ்தானின் அபோதாபாத்தில் உள்ள வீட்டில் பதுங்கியிஜந்த போது அமெரிக்க கொமாண்டோ படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

பின்னர் பின்லேடன் உடல் கடலில் அடக்கம் செய்யப்பட்டது. இந்நிலையில் பின்லேடன் என்கவுண்டர் சம்பவங்களை ஹொலிவூட்டின் கொலம்பியா பிக்சர்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து சோனி பிக்சர்ஸ் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனமும் திரைப்படமாக எடுக்கவுள்ளது.

ஒஸ்கார் விருதுபெற்ற பிரபல திரைப்பட இயக்குநர் கேத்ரின் பிக்லோ மற்றும் திரைக்கதையை மார்க்போயல் என்பவர் எழுதுகிறார்.

மார்க்போயல் ஏற்கனவே தி ஹர்ட் லாக்கர்-2010 என்ற பெயரில் ஈராக்கில் வெடிகுண்டு எதிர்ப்பு படையினர் பற்றி திரைப்படம் எடுத்துள்ளார்.

முன்னதாக கடந்த 2008 ஆம் ஆண்டு பின்லேடன் பற்றி ஒசாமா , தி கேப்சர், தி கில்லர் என்ற பெயரில் திரைப்படம் தயாரிக்க திட்டமிட்டிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# ஒசாமா கொல்லப்பட்ட இடத்தில் சோதனை நடத்துவதற்கு அமெரிக்க நிபுணர்கள் திட்டம்


(வோஷிங்டன்)

அல்கொய்தா தலைவர் ஒசாமா கொல்லப்பட்ட இடத்தில் வேறு ஏதாவது முக்கிய தடயங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதற்காக அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் விரைவில் பாகிஸ்தான் செல்லவுள்ளனர்.

அமெரிக்க அதிகாரிகள் இது பற்றி கூறியிருப்பதாவது, பாகிஸ்தானின் அபோதாபாத்தில் இரகசியமாக தங்கியிருந்தஅல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் சமீபத்தில் அமெரிக்க கொமாண்டோ படையினரால் கொல்லப்பட்டார். தாக்குதல் நடத்திய கொமாண்டோ படையினர் அந்த வீட்டிலிருந்த சில காணொளிகள், கணனிகள் ஆகியவற்றை மட்டுமே தங்களுடன் எடுத்துச் சென்றனர். கொமாண்டோ படையினர் 40 நிமிடங்கள் மட்டுமே அங்கிருந்ததால் முழுமையாக சோதனை நடத்த முடியவில்லை.

எனவே அந்த இடத்தில் மேலும் தீவிரம்ாக சோதனை நடத்த அமெரிக்க உளவுப் படை திட்டமிட்டுள்ளது. இதற்காக அமெரிக்க உளவுப் படையில் உள்ள தடயவியல் நிபுணர்கள் இன்னும் சில நாட்களில் அபோதாபாத் செல்லவுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-2)



சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள வடகொரிய தலைவர் கிம் ஜாங்-2 (இடது ) தலைநகர் பீஜிங்கில் ஜனாதிபதி ஹு ஜிண்டாவோவை சந்திப்பதை படத்தில் காணலாம்.

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**ஊ. விசாரணை இன்றித் தடுத்து வைத்தலைத் தடைசெய்தல்**

221. விசாரணை இன்றித் தடுத்து வைத்தல் மற்றும் சட்டவிரோதமாகத் தடுத்துவைத்தல் ஆகியவற்றிற்கு எதிரான சுதந்திரத்தைச் சகலருக்கும் சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம் உறிதிப்படுத்துகிறது. (ஐ.சி.ஆர்.சி. உறுப்புரை 9 இனைப்பார்க்கவும்)

எவரும் கைது செய்யப்பட்டால் அவன் கைதுக்கான காரணங்கள் மற்றும் ஏதும் குற்றங்கள் பற்றி அவருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். சட்டத்தை மீறிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட எவரும் உடனடியாகச் சட்ட அதிகாரி ஒருவர் முன்னிலைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நியாயமானதொரு காலப்பகுதிக்குள் சட்டநடவடிக்கை எடுக்கப்பட அல்லது விடுதலை செய்யப்பட உரித்துடையவராவர். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவரை பொதுவாகத் தடுப்புக்காவலில் வைக்கப் படலாகாது.



222. பாரிய எண்ணிக்கையில் நீண்ட காலங்களுக்கு மற்றும் வழக்கறிஞர் அல்லது நீதிமன்றங்களுக்கான பிரவேசம் இன்றி விசாரணை இல்லாமல் திட்டமிட்டுத் தடுத்துவைப்பது தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மெனிக்பாம் போன்ற புறத்தொடர்பற்ற முகாம்களில் பாரிய எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்தோரை அடைத்துவைப்பது குறிப்பாக இதனுள் அடங்கும். ஏப்பிரல் முதல் செப்ரம்பர்வரை 2 இலட்சத்து 90ஆயிரம் வரையிலானவர்கள் அடைக்கப்பட்டு கட்டுப்பாடுகளை அனுபவிக்க நேரிட்டது. இடம் பெயர்ந்தோர் அனைவரும் விசாரணை இன்றித்தடுத்துவைக்கப் பட்டனர்.

**தமிழாக்கம் தொடர் 28**

மேலும், முன்னாள் எல்.ரி.ரி.ஈ. இனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சுமார் 12ஆயிரம் பேர்கள் நடைமுறைப் பாதுகாப்பு மற்றும் ஐ.சி. ஆர்.சி. இனால் சந்திக்கமுடியாதவாறு வேறான இடங்களில் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப் பட்டார்கள். இவ்விடங்களில் தடுத்து வைக்கப்பட்ட பெரும்பாலோர் மீது எந்தவொரு குற்றமும் சுமத்தப்படவில்லை என்பதோடு, குற்றம் சாட்டப்பட்டோரை வழக்கு நடைபெறும் வரை தடுத்து வைப்பது பொதுவானதொருவிதியாகவே இருந்தது.

**(எ) உணவு மற்றும் நீர், உடை, மற்றும் தங்குமிடம் அத்துடன் சுகா தாரம் ஆகியவற்றைப் பெறுவதற் கான உரிமைகள்**

223. சகலருக்கும் போதியளவு உணவு உடை மற்றும் இருப்பிட வசதி ஆகியவற்றிற்கு சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம் உத்தரவாதம் அளிக்கிறது. (பொருளாதார, சமூக மற்றும் கலாசாரஉரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை ஐ.சி.ஈ.எஸ்.சி. ஆர். உறுப்புரை 11)

"சுய விருப்பின் அடிப்படையில் அவசியமான சர்வதேச ஒத்துழைப்புக்கான இதன் விளைவுகளை இனங்கண்டு இவ்வுரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தோதான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கங்கள் தம்மை அர்ப்பணித்துள்ளன.

(77) மேலும், அடையமுடிந்த ஆகக்கூடிய பௌதீக மற்றும் மனம் சார்ந்த சுகாதாரத்தை அனுபவிப்பதற்கான உரிமை சகலருக்கும் உண்டு (ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். உறுப்புரை12) சுத்த நிலைமைகள், நோய்த்தடுப்பு மற்றும் பரிகாரம் அத்துடன் போதிய மருத்துவக்கவனிப்பு ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக அரசாங்கங்கள் தோதான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

224. தான் பகிரங்கமாக அறிவித்ததைவிட மிகஅதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உண்மையிலேயே யுத்தவலயத்தில் இருந்து வெளியேறுபவர்கள் மற்றும் அவர்களுக்கு போதிய பராமரிப்பை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கம் அறிந்திருந்தது அல்லது அறிந்திருக்க வேண்டும் என்பதால் அவர்களுக்காக முற்கூட்டியே ஏற்பாடுகளைச் செய்ய அல்லது தேவை தெளிவாகியதும் நிலைமைகளைச் சமாளிக்க அரசாங்கம் தவறியது என்பதால் இந்த ஏற்பாடு மீறப்பட்டதை நம்பகமான குற்றச்சாடடுக்கள் எடுத்தியம்புகின்றன.

மெனிக்பாம் மற்றும் ஏனைய முகாம்களை புறத்தொடர்புகள் இன்றி வைத்து இடம்பெயர்ந்தவர்களை விடுவிக்காததோடு, இடம் பெயர்ந்தோர் தம் உறவுகளுடன் இருப்பதற்கும் அது அவர்களை அனுமதிக்கவில்லை.

யுத்தத்தின் பின் மெனிக்பாமில் தடுக்கூடிய மரணங்கள் நேர்ந்ததோடு நோய் மற்றும் மனிதர்களுக்களுக்கு ஒவ்வாதநிலை இருந்ததைக் கொண்டதான மீறல்கள் பற்றிக் குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**ஏ) ஒன்று கூடுவதற்கும் ஒன்று சேர்ந்து பழகுவதற்குமான சுதந்திரங்கள்**

225. ஒன்று கூடுவதற்கும் சேர்ந்து பழகுவதற்குமான சுதந்திரத்தையும் சர்வதேச மனித உரிமைகள்சட்டம் உறுதிப்படுத்துகிறது. (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரைகள் 21 மற்றும் 22) சட்டத்தினால் விதிக்கப்பட்டால் மற்றும் தேசியபாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, பொது அமைதி, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது நல்லொழுக்கத்தைப் பாதுகாத்தல் அல்லது ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் தேவைகள் ஆகியவற்றுக்காக இவ்வுரிமைகள் கட்டுப்படுத்தப்படலாம்.

எந்தவொரு கட்டுப்பாடும் அளவின் பொருத்தத்தைத் திருப்திப்படுத்த வேண்டும்.

226. பிரித்தெடுக்கும் இடங்களில் அல்லது மொனிக்பாமில் இடம் பெயர்ந்தோர் சர்வதேச அமைப்புக்களுடன் அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதை உள்ளிட்ட கூட்டங்கள் மற்றும் ஒன்று சேர்ந்து பழகுவதைத் தடுப்பதற்காக தொடர்ச்சியாக அவசரகால அதிகாரங்கள் மற்றும் இராணுவத்தின்தேவை முன்வைக்கப்பட்டதன் மூலம் பொதுமக்கள் பாதுகாப்பிற்கான எந்தவொரு நியாயமான மதிப்பீட்டையும் விட அளவில் இக்கட்டுப்பாடுகள் அதிக மாகவுள்ளதோடு, யுத்தத்தில் உயிர் தப்பியவர்களுடன் புறத்தொடர்புகளைத் தடுப்பதற்காகவும் அவை ஒரு பகுதியாக மேற் கொள்ளப்பட்டதாகத் தென்படுகிறது.

**(78) (ஐ) பெண்களின் உரிமைகள்**

227. சர்வதேச உரிமைச் சட்டத்தின்கீழ், எந்தவொரு பாகுபாடுமின்றி சகல சிவில், அரசியல், பொருளாதார, சமூகமற்றும் கலாசார உரிமைகளை அனுபவிக்கும் சமஉரிமைகளை பெண்களுக்கு உறுதிப்படுத்துவது அரசாங்கங்களின் கடப்பாடாகும். (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரை 2 (1) உறுப்புரை 3 பெண்களுக்கு எதிரான சகல விதமான பாராபட்சங்களையும் அகற்றுவதற்கான உடன்படிக்கை) பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரா பட்சங்களையும் அகற்றுவதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் கடமையை இக்கட்டுப்பாடு உள்ளடக்குகிறது. மீறல்களைத் தடுப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு மற்றும் மீறல் களைத் தண்டிப்பதற்கு அத்துடன் நஷ்டஈடு வழங்குவதற்கு, அவை பொது அல்லது தனிப்பாத்திரம் மேற்கொண்டிருந்தபோதிலும், அரசாங்கத்திற்கு ஒரு கடப்பாடு உண்டு.

228. புலனாய்வு செய்யப்படாத, மெனிக்பாமில் நடந்தேறிய பாரதூரமான கற்பழிப்புச் சம்பவங்கள் உள்ளிட்ட முகாம்களில் மற்றும் மீள்குடியமர்த்தல் செயற்பாட்டின் போது, பெண்கள் பாலியல் தொடர்பான வன்முறைக்கு ஆளாக்கப் பட்டனர் என்பதால் இவ்வுரிமைகள் மீறப்பட்டதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. பாலியல் சார்ந்த வன்முறைக்குச் சாதகமான முகாம்களின் சூழலை மாற்றுவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தவறியுள்ளது.

விதைவைகள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், இளம் தாய்மார்கள் தடுத்து வைக்கப் பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் மனைவிமார் மற்றும் தாய்மார்கள் ஆகியவர்களை உள்ளிட்ட இலகுவில் தாக்கமுறக்கூடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், பாலியல் மற்றும் பாலியல் வேற்றுமை காரணமாக வன்முறைக்கு ஆளானவர்கள் சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. மற்றும் முன்னாள் பெண்போராளிகள் ஆகியோர் தேவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக எந்தவொரு விசேட ஏற்பாடுகளும் இருக்கவில்லை.

**(ஒ) குடும்பங்களுக்கான விசேட பாதுகாப்பு**

229. சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம் குடும்ப அலகுக்கு விசேட முக்கியத்துவத்தை வழங்குகிறது என்பதோடு, அதனைப்பாதுகாத்து மேம்படுவதற்கான கடப்பாடு அரசுக்கு உண்டு (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரைகள் 17மற்றும் 23, ஐ.சி.ஈ.எஸ்.சி.ஆர். உறுப்புரை 10)யுத்தவலயத்திலிருந்து தப்பிய போது, பிரிக்கும் செயற்பாட்டின் போது மற்றும் ஆஸ்பத்திரிகள் மற்றும் முகாம்களுக்கு மாற்றும் போது குடும்ப அலகைப் பேணுவதற்கு,பிரிந்த குடும்ப உறுப்புனர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அல்லது அவர்கள் எங்கிருக்



கிறார்கள் என்ற தகலை வழங்குவதற்கு கிஞ்சித்தேனும் கவனம் செலுத்தாது அரச பராமரிப்பில் இருந்த குடும்ப உறுப்பினர்கள் பிரிக்கப்பட்டனர் என்பதால் இக் கடமைகள் மீறப்பட்டமைக்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.போதியதொரு மாற்றுவழியை ஏற்படுத்தாமல் குடும்பங்களைக் கண்டுபிடிப்பதில் மிகத்திறமையுடன் கூடிய ஐ.சி.ஆர்.சி. இனை அரசாங்கம் காரணம் இன்றிப் புறந்தள்ளியது.

(தொடரும்)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை9 மணி தொடக்கம் 11 மணி வரை செட்டியார் தோட்டத்தி லும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை விவசாயக் கந்தோர் லேனிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் 11 மணிவரை ஜமுனா வீதி சுகாதார மையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை சங்கிலியன் மன்றத்திலும் வழங்கப் படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# காரைநகரில் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளுக்கான நஷ்டஈட்டுத் தொகை கையளிப்பு

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் கடற்படையின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளின் உரிமையாளர்களினால் காணி அபிவிருத்தி அமைச்சிடம் கோரப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை யாழ். மாவட்ட செயலகத்திடம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

1984 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக காரைநகர் பனங்காட்டுப் பகுதியில் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட ஆயிரத்து 130.25 பரப்பளவு காணிக்கு அதன் உரிமையாளர்கள் நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகத் திறப்பு விழாவிற்கு அண்மையில் வந்திருந்த காணி அபிவிருத்தி பிரதி அமைச்சர் சிறிபால கமலநாத்திடம் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளுக்கு நஷ்ட ஈட்டுத்தொகை பெற்றுத் தருவதாக அவர் வாக்குறுதியளித்திருந்தார்.

இதன் பொருட்டு நேற்று முன்தினம் காணி அபிவிருத்தி அமைச்சினால் 57.25 மில்லியன் ரூபா யாழ். மாவட்ட செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



இந்த நிதியானது 55 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# சந்தேக நபர்கள் வெளிநாட்டுக்கு சென்றதால் பிணைப்பணம் பறிமுதல்

(சாவகச்சேரி)

கைதடி மேற்கைச் சேர்ந்த செல்லையா சிவசுப்பிரமணியம் என்பவரை 15 பேர் அடங்கிய குழுவினர் தடியால் அடித்து காயப்படுத்தியமை சம்பந்தமாக கடந்த 14.08.2011 இல் எழுதப்பட்ட வழங்கில் சந்தேக நபர்கள் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியா்ன ஆட் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கின் மறுவிசாரணை கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 6 ஆவது மற்றும் 12 ஆவது சந்தேக நபர்கள் மன்றில் சமுகமளிக்கவில்லை. இருவருக்கும் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் இரு சந்தேக நபர்களும் வெளிநாட்டுக்கு சென்றிருப்பதால் மன்றில் முற்படுத்த முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இருவரும் செலுத்திய பிணைப்பணமான தலா 25 ஆயிரம் ரூபாவும் பறிமுதல் செய்யப்பட்டது. (ஸ்ரீ-29)

# கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியோர்

கிளிநொச்சி மாவட்ட ரீதியான கிரிக்கெட், கரப்பந்தாட்டம். எல்லே, கபடி ஆகிய போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் கிரிக்கெட் போட்டியில் முதலாமிடத்தை கண்டாவளை பிரதேச அணியும் 2 ஆம் இடத்தை பூநகரி பிரதேச அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தை கரைச்சி பிரதேச அணியும் 2 ஆம் இடத்தை கண்டாவளை பிரதேச அணியும் பெற்றுக் கொண்டன.

கரப்பந்தாட்டத்தில் முதலாம் இடத்தை கரைச்சிப் பிரதேச அணியும் 2 ஆம் இடத்தை பூநகரி பிரதேச அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான கரப்பந்து போட்டியில் கண்டாவளை பிரதேச அணி முதலாம் இடத்தையும் கரைச்சிப் பிரதேச அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதேவேளை கடந்த 22 ஆம் திகதி கிளி/மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற எல்லே போட்டியில் கரைச்சிப் பிரதேச அணி முதலாமிடத்தையும் கண்டாவளை பிரதேச அணி 2 ஆம் இடத்தையும் பெற்றன.

பெண்களுக்கான எல்லேப் போட்டியில் கண்டாவளை பிரதேச அணி முதலாம் இடத்தையும் கரைச்சி பிரதேச அணி 2 ஆம் இடத்தையும் பெற்றன.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் முதலாமிடத்தை கரைச்சிப் பிரதேச அணியும் 2 ஆம் இடத்தை கண்டாவளை பிரதேச அணியும் பெண்களுக்கான கபடிப் போட்டியில் பூநகரிப் பிரதேச அணி முதலாமிடத்தையும் கரைச்சிப் பிரதேச அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ஸ்ரீ-2)

# சரத் பொன்சேகா நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பிரதித் தலைவருமான சஜித் பிரேததாஸ தெரிவித்துள்ளார்.

அவரை நாட்டின் அபிவிருத்தியின் பங்களிப்பில் பங்கு பற்றச் செய்யவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொன்சேகாவின் நலன் விசாரிப்பதற்காக வெலிக்கடைக்குச் சென்று திரும்பியபோது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா போன்ற உண்மையான வீரரைச் சிறைவைத்துக் கொண்டாடும் வெற்றிக் கொண்டாட்டம் கேலிக்குரியது எனவும் வெற்றிக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய வீரரான பொன்சேகாவை விடுதலை செய்வதன் மூலமே அவரது வீரத்திற்கு மரியாதை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# போலி வெளிநாட்டு நிறுவனங்களை சுற்றி வளைக்க நடவடிக்கை

போலியான ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்பும் போலி நிறுவனங்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணிமனை தெரிவித்துள்ளது.

இவ்வாறு போலியான ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்ட இரண்டு பெண்கள் நேற்று முன்தினம் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பணிமனையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அந்த பெண்கள் இருவரும் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்ல முற்பட்டனர். குறித்த பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்ப போலியான ஆவணங்களை தயார் செய்த நிறுவனம் சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிறுவனமானது இதற்கு முன்னரும் இவ்வாறு போலி ஆவணங்களை தயார் செய்து பணிப்பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)


# அடோப்பின் அங்கீகரிக்கப்பட்ட மல்ரி மீடியா கற்கை நெறி

## இலங்கையில் முதன்முறையாக அறிமுகம்

கணனி உலகின் மிகப்பெரிய நிறுவனமான Adobe (அடோப்) நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியை முதன்முறையாக இலங்கையில் சக்தி மைக்ரோ சிஸ்ரம் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்டது.

இதுவரை காலமும் இந்தியா சென்று கற்க வேண்டிய அடோப் மல்ரி மீடியா கற்கைநெறியை இலங்கையில் கற்பிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் SAKTHI MICRO SYSTEM (சக்தி மைக்ரோ சிஸ்ரம்) ஆகும்.

தவிர இந்திய மல்ரி மீடியா வல்லுநர்களை இலங்கைக்கு வரவழைத்து மல்ரி மீடியா கற்கைநெறிகளை மேற்கொள்கிறது. உலக சந்தைகளில் மல்ரி மீடியா துறையில் அதிக வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றது. இன்று அனைத்து துறைகளிலும் மல்ரி மீடியாவின் ஆதிக்கம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளம்பர விபரணம்



## வட்டுக்கோட்டை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்கு வாடகைக்கு வீடு தேவை

இலங்கை மின்சாரசபை, வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்கு சுழிபுரம் சந்தியிலிருந்து சித்தங்கேணி சந்தி வரையான யாழ். காரைநகர் பிரதான வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் இரண்டு வாகனங்கள் தரிக்கக்கூடியதாகவும், மின்கம்பங்கள் இறக்கி வைக்கக் கூடிய இடவசதியும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. தங்களின் விண்ணப்பங்களை 06.06.2011 ஆம் திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

(சி-3312)

# கண்ணிவெடி அகற்றப்படாத பிரதேசங்களை சேர்ந்தோர் கைவேலி, கோம்பாவிலில் குடியேற்றம்

## முல்லை. அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 9 கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 887 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 930 பேரை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கைவேலி மற்றும் கோம்பாவில் பகுதிகளில் தற்காலிகமாகக் குடியேற்றுவதற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பங்கள் தற்போது வவுனியா மெனிக்பாம் முகாமில் இருக்கின்றன. இவர்களது பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் தாமதமடைவதால் இவர்களை மெனிக்பாம் முகாமில் இருந்து வசதிகளுடன் வேறிடத்தில் குடியேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களது பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவடைந்ததும் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடும்பங்களுக்கு கால் ஏக்கர் தொடக்க அரை ஏக்கர் வரையிலான காணிகள் தோட்டங்கள் செய்யக்கூடிய வகையில் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்குத் தேவையான அரச காணிகளும் நீர்வளமும் கைவேலி, கோம்பாவில் பகுதியில் இருப்பதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பற்பசை, பற்தூரிகைகளுக்கு தரச் சான்றிதழ் அவசியம்

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

பற்பசை மற்றும் பற்தூரிகை என்பவற்றை விற்பனை செய்வதற்கு தரச்சான்றிதழ் அவசியம் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டிருப்பதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூம் மர்சூக் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தரச்சான்றிதழ் அற்ற பற்பசைகளும் பற்தூரிகைகளும் எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் விற்பனைக்கு தடை செய்யப்படவுள்ளதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)


# அரச ஊழியர்களுக்கான சிங்கள வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

அரச ஊழியர்களுக்காக முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தினரால் இரண்டாவது மூன்றாவது மட்ட சிங்கள பாட வகுப்புக்கள் யாழ். மாவட்டத்தில் ஏழு நிலையங்களில் நேற்று ஆரம்பமாகி இன்றும் நடைபெறவுள்ளது.

இதில் இன்று கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் பி.ப.2 மணிக்கும் பருத்தித்துறை வேலாயுதம் மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கும் சாவகச்சேரி நகராட்சி மன்ற மண்டபத்தில் பி.ப. 4 மணிக்கும் ஆரம்பிக்கவுள்ளதாக வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவன பணிப்பாளர் சி.கிருஸ்ணானந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# ஒலிம்பியாட் போட்டியிலிருந்து தெரிவாகி இந்தோனேசியா பயணம்



(கரவெட்டி)

அகில இலங்கை சிரேஷ்ட கணித ஒலிம்பியாட் போட்டியிலிருந்து தெரிவாகி இந்தோனேசியா செல்லும் 8 பேர் கொண்ட குழுவில் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை சேர்ந்த செல்வன் சிவசுப்ரமணியம் தனுஷன் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் யாழ். மாவட்டத்திலிருந்து இந்தோனேசியா செல்லும் முதல் மாணவர் என்ற பெருமையை இம்மாணவர் பெற்றுள்ளார்.

இக்குழுவினர் எதிர்வரும் ஜுன் மாதம் 18 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள போட்டியில் பங்குபற்றவுள்ளனர். (ஸ்ரீ-24)

# 2011.05 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1453-ஓட்டோமான் படைகள் கான்ஸ்டான்டினோபில் நகரைக் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை முடிவுக்குக் கொண்டு வந்தன.

★ 1660-இரண்டாம் சார்ள்ஸ் பிரித்தானியாவின் மன்னனாக மீண்டும் முடிசூடினான்.

★ 1727-இரண்டாம் பீற்றர், ரஷ்யாவின் மன்னனாக முடிசூடினான்.

★ 1780-அமெரிக்கப் புரட்சிப் போர்: சரணடைந்த அமெரிக்கப் போர்வீரர்கள் 113 பேரை பனஸ்ட்ரே டார்லெட்டன் தலைமையிலான படைகள் கொன்றன.

★ 1790-ரோட் தீவு ஐக்கிய அமெரிக்காவின் 13 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1848-விஸ்கொன்சின் ஐக்கிய அமெரிக்காவின் 30 ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1864-மெக்சிக்கோவின் முதலாம் மாக்சிமிலியன் முதற்தடவையாக மெக்சிக்கோ வந்து சேர்ந்தான்.

★ 1867-ஆஸ்திரிய- ஹங்கேரிப் பேரரசு அமைக்கப்பட்டது.

★ 1869-பிரித்தானியாவில் பகிரங்க மரண தண்டனை தடை செய்யப்பட்டது.

★ 1903-சேர்பியாவின் மன்னன் அலெக்சாண்டர் ஒப்ரெனோவிச் மற்றும் அரசி திராகா இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1914-புனித லோரன்ஸ் வளைகுடாவில் எம்ப்ரெஸ் ஒஃப் அயர்லாந்து என்ற அயர்லாந்து பயணிகள் ஆடம்பரக் கப்பல் மூழ்கியதில் ஆயிரத்து 24 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1919-ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு சோதிக்கப்பட்டது. பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டது.

★ 1953-முதற்தடவையாக சேர் எட்மண்ட் ஹில்லறி, ஷேர்ப்பா டென்சிங் ஆகிய இருவரும் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்தனர்.

★ 1982-இலங்கை மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1985-பெல்ஜியத்தில் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற கைகலப்பில் மைதானத்தின் ஒருபகுதி இடிந்து வீழ்ந்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

★ 1988-அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன், முதற்தடவையாக சோவியத் ஒன்றியத்துக்கு விஜயம் செய்தார்.

★ 1990-போரில் யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதியானார்.

★ 1999-டிஸ்கவரி விண்ணோடம் சர்வதேச விண்வெளி நிலையத்துடனான தனது முதலாவது இணைப்பை வெற்றிக்கரமாக முடித்தது.

★ 1999- 16 ஆண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் நைஜீரியாவில் ஜனாதிபதியை மக்கள் தெரிவு செய்தனர்.

### பிறப்புக்கள்

★ 1917-ஜோன் எஃப் கென்னடி, ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது ஜனாதிபதி (இ.1963)

★ 1984-கார்மெலோ ஆந்தனி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.


### இறப்புக்கள்

★ 1500-பார்த்தலோமியூ டயஸ், போர்த்துக்கேய நாடுகாண் பயணி

★ 1892-பஹாவுல்லா, பஹாய் மதஸ்தாபகர் (பி.1817)

★ 1987-சரண் சிங், இந்தியக் குடியரசின் ஏழாவது பிரதமர் (பி. 1902)

★ 1994-எரிக் ஹோனெக்கர், கிழக்கு ஜேர்மனியின் கடைசி ஜனாதிபதி (பி. 1912)



**1872 ஆம் ஆண்டு இந்நாளில்தான் ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமி, பிறந்தார். (இ.1964)**

# தயாநிதி மாறன்-சோனியா சந்திப்பின் பின்னணி என்ன?



(புதுடில்லி)

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பேரனும் மத்திய ஜவுளித் துறை அமைச்சருமான தயாநிதி மாறன், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை அவரது இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை சந்தித்திருப்பது டில்லி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

கருணாநிதியின் மகளும் மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு தொடர் பான வழக்கில் கைது செய்யப்பட்டு டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிறையிலுள்ள கனிமொழியை கருணாநிதி திங்கட்கிழமை சந்தித்தார். டில்லியில் தங்கியிருந்த அவரை மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், குலாம் நபி ஆசாத், பாரூக் அப்துல்லா, வி.நாராயணசாமி, காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் ஜெயந்தி நடராஜன் உள்ளிட்டோர் சந்தித்தனர். கனிமொழியைச் சந்தித்த கருணாநிதி ஒருநாள் டில்லியில் தங்கியிருந்த போதும் மரியாதை நிமித்தமாகக்கூட காங்கிரஸ் தலைவரைச் சந்திக்காதது குறித்து சென்னையில் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு கருணாநிதி, என் மகள் கனிமொழி சிறையில் இருப்பதால் இந்தத் தருணத்தில் அவரைச் சந்திப்பது முறையாக இருக்காது என்பதற்காகவே சந்திப்பு தவிர்க்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

மேலும் ஜூன் இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் மூன்றாவது குற்றப் பத்திரிகையை சி.பி.ஐ.தாக்கல் செய்ய இருப்பதாகவும் அதில் தமிழகத்திலிருந்து மேலும் சில முக்கிய புள்ளிகள் கைது செய்யப்படலாம் என்றும் தெரிகிறது.

ஆ.ராசாவைத் தொடர்ந்து அவருக்கு முன்னதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதி மாறனின் பெயரும் குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தி.மு.க.வின் சார்பாக இதுவரை டில்லி பணிகளை கட்சி நாடாளு மன்றத் தலைவர் டி.ஆர். பாலு மேற்கொண்டு வரும் நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் திடீரென்று தற்போது சந்தித்திருப்பது தலைமையின் ஒப்புதலுடன் நடைபெற்று இருக்குமா என்பது போன்ற கேள்விகள் டில்லி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றன.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி முதல்முறையாக ஆட்சி அமைத்த போது அதில் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் பதவியில் தயா நிதி மாறன் இருந்தார்.

முரசொலி மாறனின் மறைவுக்குப் பின்னர் மத்திய அரசுடனும் காங்கிரஸ் தலைமையுடனும் தி.மு.க.வின் அதிகாரபூர்வ தூதராக செயற்பட்டது தயாநிதி மாறன்தான். அவரது அமைச்சர் பதவியை தி.மு.க. தலைமை பறித்த பின்னர் அவர் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தார்.

3 ஆண்டு இடைவெளிக்குப்பின் முதல் முறையாக 2011 தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே நடைபெற்ற கடைசிக் கட்டப் பேச்சுவார்த்தையின் போதுதான் தயாநிதிமாறனை மத்திய இரசாயனத்துறை அமைச்சர் மு.க.அழகிரியுடன் காங்கிரஸ் தலைமையுடன் சமரசம்பேச தி.மு.க. அதிகாரபூர்வமாக ஈடுபடுத்தியது.

தயாநிதி மாறன் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த போது தனது அமைச்சகம் முழுச் சுதந்திரத்துடன் முடிவெடுக்க உரிமை வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதாவது 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் தான்மட்டுமே தன்னிச்சையாக முடிவெடுக்க உரிமைகோரியதாக கூறப்படுகிறது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான விசாரணையில் 1999 ஆம் ஆண்டு முதல் தொலைத் தொடர்புத்துறை சம்பந்தப் பட்டவர்களிடம் நாடாளுமன்றத் கூட்டுக் குழு விசாரணை நடத்தக்கூடும் என்று தெரிகிறது.

இத்தகைய சூழலில் சோனியா காந்தியை தயாநிதி மாறன் சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தி.மு.க.தலைமையின் ஒப்புதலுடன்தான் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை தயாநிதிமாறன் சந்தித்தாரா, இல்லை தனிப்பட்ட முறையில் சந்தித்தாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. தயாநிதிமாறன், சோனியாகாந்தி சந்திப்பின்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத்தும் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சர்வதேச கடற்கொள்ளையர் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும்

## மன்மோகன் சிங் வலியுறுத்து

கடல் வழிப்போக்குவரத்தில் சர்வதேச அளவில் அச்சுறுத்தலாக விளங்கும் கடல்கொள்ளையர் பிரச்சினைக்கு முடிவு காண ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தினார்.

செங்கடல் மற்றும் சோமாலியர் கடற்பகுதியில் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் மிகப்பெரும் சவாலாக உள்ளது. இது கடல்சார் வர்த்தகத்தையே பெரிதும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

சோமாலியாவில் ஸ்திரமான அரசு அமைய சர்வதேச சமுதாயம் முயற்சி மேற்கொண்டுள்ளது. அதற்கு குந்தகம் ஏற்படாது பார்த்துக் கொள்ளும் அதேவேளையில் கடற்கொள்ளையர் பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபையின் குறுக்கீடு அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

எதியோப்பியாவின் நாடாளுமன்றத்தின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். எதியோப்பியாவுக்குச் சென்ற முதலாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமை மன்மோகன் சிங்கிற்கு கிடைத்திருக்கிறது. அவருக்கு அந்நாட்டு நாடாளு மன்றத்தில் மிகச்சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் மன்மோகன்சிங் கூறியதாவது, கடற்கொள்ளையைத்தடுக்க இந்திய அரசு மற்ற ஆபிரிக்க நாடுகளுடன் இணைந்து செயற்படத்தயாராகவுள்ளது. ஆபிரிக்க நாடுகளுக்கு இப்போது கடற்கொள்ளை மற்றும் பயங்கரவாதம் மிகப்பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. செங்கடல் மற்றும் சோமாலியாக் கடற்பகுதியில் கடற்கொள்ளையர்களின் செயற்பாடுகள் ஒரு தேர்ந்த தொழிலைப் போல உள்ளது. இது கடல்சார் வர்த்தகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு ஒருங்கிணைந்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு இது முக்கிய இணைப்பு வழியாகும். இந்தப் பிரச்சினை குறித்து இந்தியா தொடர்ந்து தனது கவலையைத் தெரிவித்து வருகிறது. சர்வதேச கடல்வழி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் 11% இந்திய நிறுவனங்களுக்கு சொந்தமானது. இந்நிறுவனங்களுக்கு சொந்தமான கப்பல்கள் மீது 200 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 70 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. பிணையாட்களை மீட்பதற்கு மிக அதிக தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இப்போதைய சூழலில் அவரவர் தங்களுக்குரிய இலக்கை நிர்ணயித்து அதன்படி வளர்ச்சிக்கு வழிகாண வேண்டியுள்ளது. சர்வதேச அளவிலான நடவடிக்கைகள் சட்டப்படி மேற்கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் கூறுகிறது.

இந்தப்பிராந்தியத்தில் அமைதியும் ஸ்திரமான சூழலும் உருவாக தனது பங்குக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் செய்யும் என்றார். (ஸ்ரீ-2)

# 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்தத்திற்கான கிராம சேவை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தால் 2011ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்புத் திருத்தம் தொடர்பான கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். கருணாநிதி தெரிவித்துள்ளார்

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் உதவி அரச அதிபர் பணிமனையில் பின்வரும் நேர அட்டவணையில் இடம் பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஜூன் 6ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் காலை 9மணிக்கும், உடுவில் பிரதேச செயலகத்தில் முற்பகல் 11மணிக்கும்,7ஆம் திகதி காலை 9 மணிக்கு சண்டிலிப்பாயிலும், 10 மணிக்கு சங்கானையிலும், பிற்பகல் 2 மணிக்கு காரைநகரிலும், 8ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறையிலும்,வேலணை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் முற்பகல் 11 மணியளவிலும் இடம்பெறும்.

அத்தோடு 9ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கரவெட்டியிலும், முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறையிலும், பிற்பகல் 2 மணிக்கு மருதங்கேணியிலும் நடைபெறும்.

10ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலும், முற்பகல் 11 மணிக்கு நல்லூரிலும், பிற்பகல் 2 மணிக்கு கோப்பாயிலும், இடம்பெறுவதோடு 13ஆம் திகதி சாவகச்சேரியில் காலை 9 மணிக்கும், பளையில் முற்பகல் 11 மணிக்கும், 14ஆம் திகதி காலை 9.30மணிக்கு கரைச்சியிலும், முற்பகல் 11மணிக்கு கண்டாவளையிலும், பிற்பகல் 2.30 மணிக்கு பூநகரி ஆகிய பிரதேசங்களிலும் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)


## காவலாளி, ஒலி, ஒளி செயற்பாட்டாளர் தேவை

நடுத்தர வயதுடைய, நற்குணமும் ஆசாரசீலராகவும் நன்நடத்தை உள்ளவராகவும் புற்றளை சூழலில் வசிப்பவராகவும் ஒலி,ஒளி இயக்கக் கூடியவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை தலைவர், புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை, புற்றளை, புலோலி என்ற முகவரிக்கு 15.06.2011க்கு முன் அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தலைவர்,
புற்றளை சித்திவிநாயகர் ஆலய
பரிபாலன சபை, புலோலி.

(சி-3297)

## வட இலங்கை சுதேச மருத்துவ சபை

### பிற்போடப்பட்டுள்ளது

29.05.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் விசேட பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

(5035)

தலைவர்,
வட இலங்கை சுதேச
மருத்துவ சபை.

செயலாளர்,
வட இலங்கை சுதேச
மருத்துவ சபை.

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி.இராசமலர் இராசதுரை

எமது நிறுவன வளர்ச்சிக்கும் ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களின் வளர்ச்சிக்கும் அச்சுவேலி புனித திரேசார் மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கும் நீண்டகாலமாக அயராது உழைத்த செல்வி. இராசமலர் இராசதுரை அவர்களின் அகால மரணச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரும் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஏனையவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஸ்ரீலங்கா புத்தகசாலை -யாழ்ப்பாணம்
உரிமையாளர்கள், ஊழியர்கள்.

லங்கா புத்தகசாலை (தனியார்)
வரையறுக்கப்பட்டது.
கொழும்பு
பணிப்பாளர்கள், ஊழியர்கள்.

(சி-3318)








அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் சிவ தொண்டர் மாநாட்டின் முதல்நாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமானது. இதில் சிவத்தொண்டர் பேரணி இடம்பெறுவதையும் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டப நாவலர் அரங்கில் நடைபெற்ற மாநாட்டில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் , செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதையும் லண்டன் தமிழர் தகவல் மையத்தால் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் 50 ஆவது அகவை பொன்விழா வெளியீட்டு மலரின் பிரதியை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் :- அலுவலக செய்தியாளர்)*

## சிறைக் கைதிகளின் பிரச்சினை குறித்து உடன் தீர்வு வழங்கும் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

சிறைக்கைதிகளின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடி உடனடித் தீர்வு வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

கைதிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்தொடர்பில்விசாரணைகளைமேற்கொண்டு அண்மையில் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் நாளை மறுதினம் வெலிக்கடை சிறைச்சாலையில் சகல கைதிகளையும் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட உள்ளதாக அவர் கூறினார். அத்துடன் விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கைதிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (2)

## பராமரிப்பாளர் இன்றிய பிள்ளையை பாடசாலையில் சேர்க்க உத்தரவு

(சாவகச்சேரி)

பராமரிக்க ஆள் இன்றிய 15 வயது ஆண் பிள்ளையொருவரை கொடிகாமம் பொலிஸார் கடந்த 25 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

மேற்படி பையனை சான்றுபெற்ற பாடசாலையில் தற்காலிகமாக அனுமதிக்குமாறு நீதிபதி.மா.கணேசராசா உத்தரவிட்டார்.(ஸ்ரீ-29)

## வாய்மொழி மூல தனி நிகழ்வுகள்

யாழ்ப்பாண கோட்ட ஆங்கில தின போட்டியின் வாய்மொழி மூல தனி நிகழ்வுகள் எதிர்வரும் யூன் மாதம் முதலாம் திகதி நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைத்துப் போட்டியாளரும் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மனித உரிமை மீறல்களை விசாரிக்க மற்றுமொரு ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு- கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்க என இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்படவுள்ள குழு தொடர்பில் விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை உரிய முறையில் விசாரணை செய்யாத இலங்கை மனித உரிமைகள் ஆணைகுழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்த குழு அமைக்கப்படவுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதியினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தலைவராக நியமிக்கப்படவுள்ள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் பிரியந்த பெரேராவை கோடிட்டு இந்த விசாரணைக் குழு தொடர்பான செய்தி வெளியாகியுள்ளது.

சிங்களவர்களை அதிகமாக கொண்ட ஐவர் அடங்கிய முன்னாள் நீதியரசர்கள் இந்த குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு சுமத்தியுள்ள குற்றச்சாட்டின் காரத்தை குறைக்கும் வகையிலேயே இந்தக்குழு அமைக்கப்படவுள்ளது.

எனினும் இந்தக் குழு எந்தளவு சுயாதீனமாக இயங்கும் என்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது ஒருவர் எனினும் கொல்லப்படவில்லை என்று ஏற்கனவே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (2-4)

## சவுதியில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கு சவுதி அரசாங்கம் நட்டஈடு

சவுதியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கை தமிழ்பணிப்பெண்ணின் குடும்பத்துக்கு 40 ஆயிரம் சவுதி ரியால்கள் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக சவுதியில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. குறித்த செய்தியினை த அரப் நிவ்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சவுதி அரேபியாவின் அபா பிராந்தியத்தில் பணியாற்றிய புஸ்பவள்ளி செல்லத்துரை என்பவரே அண்மையில் அவரது தொழில் வழங்குநரால் படுகொலை செய்யப்பட்டார்.

மரணத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர் கொலை செய்யப்பட்டமை ஊர்ஜிதமானது. இதனை அடுத்து அவரை கொலை செய்தவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரது எஜமானி கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நட்டஈடாக வழங்க ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த கொலையாளி விடுவிக்கப்படுவார் என தெரிவிக்கப்படுகின்றது. (2)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
12 . 03 . 1940



விண்ணில்
09 . 06 . 2010

### திருமதி.பசுபதி-விஜயலட்சுமி
(சின்னக்கிளி)

அனலைதீவு ஐயனாரின் துணை கொண்டு ஐயம்பிள்ளை- சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியாகக் கொட்டடியில் வந்துதித்து சவிரிமுத்து- ஆச்சுமுத்து தம்பதிகளின் அரவணைப்பில் பாசமிகு பெறாமகளாக பூத்துக் குலுங்கி ஆத்திசூடி வீதி நாகமுத்து -மாரிமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வன் பசுபதியைக் கரம்பிடித்து எட்டு முத்தான மக்கள் செல்வங்களைப் பெற்று உற்றார்,உறவினர், நண்பர்களுடன் அன்பாக உறவாடி ஆலமரம் போல தலை நிமிர்ந்து வாழ்ந்தாய் அம்மா.ஆண்டு ஒன்று சென்றதம்மா ஆறவில்லை உன்துயர் உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அனலைதீவு ஐயனாரையும் கொட்டடி ஞானவைரவப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

"பசுபதி"
இல:11, முத்தமிழ் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(5037)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும். *-மெர்ரி கிளாட்சன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சுவாமி நான் ஆற்றங்கரையில் இறக்கிவிட்டேன் நீங்கள் இன்னமும் அதை மறக்கவில்லையா?

துறவி ஒருவரும் அவரது இளம் சீடரும் ஓர் ஆற்றைக் கடந்து செல்லத் தயாரானபோது அங்கு நின்ற ஓர் இளம் பெண், சுவாமி நானும் அக்கரைக்குச் செல்ல வேண்டும். என்னையும் கூட்டிச் செல்லுங்கள் என்றாள்.

அதற்கு சுவாமி, நான் ஒரு துறவி. நீயோ இளம் பெண். உன்னை அக்கரைக்குக் கூட்டிச் செல்ல முடியாது என்று மறுத்துவிட்டார்.

அந்த இளம் பெண்ணோ அக்கரைக்குச் செல்ல வேண்டிய தன் அவசியத்தையெல்லாம் எடுத்துரைத்தாள்.

சுவாமி இரங்குவதாக இல்லை. துறவி சரிவர மாட்டார் என்பதைப் புரிந்துகொண்ட அந்த இளம் பெண் சுவாமிக்கு அருகில் நின்ற இளைஞனிடம் இந்த ஆற்றைக் கடப்பதற்கு எனக்கு உதவுங்கள் என்று மன்றாடினாள்.

ஆபத்திற்குப்பாவமில்லை என்பதை உணர்ந்த இளைஞன் சரி உனக்கு உதவி செய்கின்றேன் எனக் கூறி அந்த இளம் பெண்ணைத் தூக்கியவாறு ஆற்றில் இறங்கி நடக்கலானான். கூடவே துறவியும் நடக்கலானார்.

ஆற்றங்கரையில் பெண்ணை இறக்கிவிட அவள் பல கோடி நன்றி கூறி அங்கிருந்து அகன்றாள்.

சுவாமிக்கோ கடும் கோபம். அந்த இளைஞரைத் திட்டினார். ஓர் இளம் பெண்ணை எப்படித் தூக்கி வருவாய் என்று கடிந்தார்.

சுவாமி அந்தப் பெண்ணின் அவல நிலை கண்டே அந்த உதவியைச் செய்தேன். நான் உதவியது தவறாயின் என்னை மன்னிக்குக என்றான் இளைஞன்.

சுவாமி அமைதியடைந்தார். சிறிது தூரம் சென்றதும் எதுவாயினும் நீ செய்தது தவறு என சுவாமி மீண்டும் கூறினார். மீண்டும் சுவாமியிடம் மன்னிப்புக் கேட்டான் இளைஞன். சுவாமி விடுவதாக இல்லை. சிறிது தூரம் சென்றதும் துறவி மீண்டும் அந்த சம்பவத்தை ஞாபகப்படுத்துவார். ஒரு தடவை பொறுமையிழந்த அந்த இளைஞன் "சுவாமி நான் அந்த இளம் பெண்ணை ஆற்றங்கரை மட்டுமே தூக்கி வந்தேன். ஆனால் நீங்களோ அந்தப் பெண்ணை இப்போதும் தூக்கி வைத்திருக்கிறீர்கள் என்றான்.

சுவாமி அதிர்ந்து போனார். இளைஞன் கூறியதில் இருக்கக்கூடிய அர்த்தம் சுவாமிக்கு மகா தத்துவமாயிற்று.

அது சரி. இப்போது எதற்காக இந்தக் கதையென்று நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றுக்கும் தொடர்பு உண்டு.

இந்த நாட்டு ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறும் ஒவ்வொரு தடவையும் அவர்கள் கேட்பதைத் தரமுடியாது எனக் கூறுவார்.


அட! விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் கேட்பதை ஜனாதிபதி இதுவரை தூக்கி வைத்துக்கொண்டே இருக்கிறார்.

சிலவேளைகளில் அவர் நமக்கு ஞாபகப்படுத்துவது போலவும் இருக்கிறது. வன்னி யுத்தம் முடிந்து 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆரம்பப் புள்ளியாக வைத்துக்கொண்டு பேசுவதற்கு தமிழ்த்தரப்பு தயாராகி விட்ட போதிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரப்படும். ஆனால் அவர்கள் கேட்டதல்ல. இப்படி கூறுவதன் தத்துவம்தான் என்ன? எதுவுமே புரியவில்லை.

# நல்லை ஆதீனத்தினால் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனுக்கு சைவ சிவஞானபானு எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனுக்கு சைவ சிவஞானபானு என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் சிவத்தொண்டர் மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் நேற்று நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டப நாவலர் அரங்கில் நடைபெற்றது. இதன்போதே அவருக்கு மேற்படி பட்டம் வழங்கப்பட்டது.

இதுதவிர லண்டன் தமிழர் தகவல் மையத்தால் ஆறு. திருமுருகனின் 50 ஆவது அகவைப் பொன்விழா மலர் வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர நல்லை ஆதீனத்தால் நினைவுப்பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஸ்ரீ-6)

## குழுக்கூட்டம்

யாழ் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் கட்டாயக் கல்வி வரவுக் குழுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஆர்.ராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சமாதான நீதவான்கள், ஆசிரியர்கள், சமூகமட்ட நிறுவனங்களின் பிரதி நிதிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டு பின் தங்கிய மாணவர்களின் கல்வியை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-70)

## சங்காபிஷேகம்

ஆவரங்கால் மேற்கு சாந்தா தோட்ட ஞான வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ஜெயபாலசர்மா தலைமையில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறுமென தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-70)

## பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக் கிடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டம், கபடி ஆகிய போட்டிகள் நாளை திங்கட்கிழமை பி.ப.2.30 மணிக்கும் ஆண்க ளுக்கான எல்லே, பெண்களுக்கான வலைப் பந்தாட்டம் என்பன நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் பி.ப.2.30 மணிக்கும் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதா னத்தில் இடம்பெறவுள்ளது.

கழக வீரர்களை கலந்துகொள்ளுமாறும் தெல்லிப்பழை பிரதேச சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-53)

# ஆண்டவரின் ஆவியே நமக்கு சார்பாக இருக்கும் போது எதற்கும் அஞ்சிடாமல் வாழ்வோம்.(யோ:14:15-21)


இன்று நாம் தூய ஆவியானவர் பற்றி சிந்திக்க திருச்சபை எம்மை அழைக்கின்றது. உயிர்த்த இயேசு நமக்குத் தந்த மிகச் சிறந்த கொடை தூய ஆவியார் என்று உறுதிபடக்கூறி விடலாம்" என் பெயரால் தந்தை அனுப்பப் போகுற தூய ஆவியால் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்'' (யோ 14:26) அந்த ஆவியானவரைதாம் விண்ணகம் செல்லும் முன்னர் தம் சீடர்களுக்கு அறிமுகப்படுத்தினார் இயேசு. இயேசு தம் சீடர்களுக்கு இறுதி அறிவுரை வழங்கும் போது, ``மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு தந்தையிடம் கேட்பேன் '' (யோ14:16) என்கிறார். அந்தத் துணையாளரே தூய ஆவியானவர் நம்மை திக்கற்றவர்களாக கைவிடாத இறைவன், நம்மோடு குடிகொள்ள விரும்பியதால், இம்மானுவேல் இறைவனாக இவ்வுலகில் பிறந்தார். தொடர்ந்து நம்மை வாழ்விக்க விரும்பிய இறைவன் தூய ஆவியாம் இறைவனைத் துணையாளராக நமக்கு அனுப்ப வாக்குக் கொடுப்பதை என்று நற்செய்தி சொல்கின்றது." துணையாளர் " என இங்கே இயேசு குறிப்பிடுகின்ற சொல்லுக்கு இரு பொருள்கள் உள்ளன என விவிலிய மேதைகள் கூறுகின்றனர். எபிரேய பின்னணியில் " தேற்றுகிறவர்", "ஆறுதல் அளிப்பவர்" என்பதும் உரோமை பின்னணியில் " பரிந்து பேசுபவர் ", " சார்பாக வாதாடுபவர் ", " அருகிலிருந்து உதவி செய்பவர் "என்பதும் பொருளாகும்.

தம் சீடர்கள் தம் பணியைத் தொடரும் போது அவர்களுக்கு இன்னல்கள் ஏற்படும் என்பதை இயேசு முன்னறிவித்தார். அவர்களுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்படும் போது அவர்களுக்காக பரிந்து பேசத் தூய ஆவி துணையாவார் எனவும் இயேசு அறிவிக்கிறார் என்பதை (மாற் 13:9-13, லூக் 12:11-12) காணலாம். இயேசு தந்தையிடம் நமக்காக பரிந்து பேசி பெற்றுத் தருகின்ற தூய ஆவி திருச்சபையோடு என்றும் தங்கியிருந்து நமக்கு அனைத்தையும் கற்றுத் தருவார். அவர் நம்முள்ளங்களில் எழுப்புகின்ற நல்ல சிந்தனைகள் நம் வாழ்வுக்கு துணையாகும். கடவுளின் ஆவியே நமக்குச் சார்பாக இருக்கும் போது நாம் எந்தச் சக்திக்கும் அஞ்சி ஓட வேண்டியதில்லை என இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

இறை நம்பிக்கை மனிதனை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது. வாழ்வில் தோல்வியை சந்திக்கும் மனிதன் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்குக் காரணம் இந்த இறைநம்பிக்கையில் இருக்கும் குறைவு அல்லது வெற்றிடம் ஆகும். நம்பிக்கை இறைவனின் மாபெரும் கொடை. கடவுள் நம்பிக்கை கொண்ட மனிதன் மட்டுமே நம்பிக்கையின் முழுமையைக் காணமுடியும். பொன்னோ, பொருளோ. ஆட்களோ இந்த நம்பிக்கையை தர முடியாது.

நம்முள் குடிகொண்டிருக்கும் இறைவனின் ஆற்றல் மட்டுமே நிலைத்த முழுமையான இந்த நம்பிக்கையை தந்து எதையும் சாதிக்க வல்லது. நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, கடவுளே கூட இருந்தாலும் காரியங்கள் கைகூடாது என்றும் நாம் கூறிவிடலாம். இயேசுவே உடன் இருந்தாலும் காற்றும் கடலும் கொந்தளிக்கும் கண்ணில் பட்டதெல்லாம் பூதமாகத் தெரியும் (மத்8:26). நம்பிக்கை எந்த நோயையும் குணமாக்கும் (மத் 9:22). நம்பிக்கை விரும்பியதை நிறைவேற்றும் (மத் 15:28).



சிறுநம்பிக்கையிருந்தால் மலையையும் அசைக்க முடியும். கடவுள் நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். உள்ளுயிராய் இருந்து உரமூட்டி, அவநம்பிக்கையை வேரறுத்து புத்தெழுச்சியூட்டி புதுவாழ்வு தரும் தூய ஆவியை புறம் தள்ளி விட வேண்டாம். நம்மைத் தேடி வந்த இயேசு, தந்தையிடம் சென்றதோடு நின்று விடாமல் நம்மோடு என்றும் தங்கியிருந்து நமக்கு கடவுளைப் பற்றிய உண்மையை தொடர்ந்து அறிவிக்க தூய ஆவியை அளித்துள்ளதால் நாமும் சான்று பகிர்வதற்கான தகுதியையும் பொறுப்பையும் பெறுகின்றோம். கடவுளின் அன்புக்கு நாம் சாட்சிகளாக வாழ்ந்திட அழைக்கப்படுகிறோம். அழைப்பை ஏற்போம் ஆண்டவரின் ஆவியுடன் நடப்போம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# சீக்கிரம் வந்து விடுகிறேன் மௌனம் கலைத்தார் ரஜனி



நடிகர் ரஜினிகாந்த் மேல் சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றுள்ளார். அவர் சிங்கப்பூர் செல்லும் முன் அவரது ஓடியோ பதிவு மட்டும் வெளியிட்டுள்ளனர்.

அந்த ஓடியோவில் நடிகர் ரஜினிகாந்த் தனது ரசிகர்களுக்கு "ஹலோ...ஹா...ஹா... நான் ரஜினிகாந்த் பேசுறேன். மகிழ்ச்சியா போய்ட்டு வந்துட்டு இருக்கேன் நான்.

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நான் வந்துடறேன் ராஜாக்களா. நீங்க கொடுக்குற அன்புக்கு நான் என்னத்தத் திரும்பி கொடுக்கிறது.

பணம் வாங்குறேன். அக்ட் பண்ணுறேன். அதுக்கே நீங்க இவ்வளவு அன்பு கொடுக்கிறீங்கன்னா நான் என்னத்த கொடுக்கிறது. நிச்சயமாக நீங்க எல்லாரும் தலை நிமிர்ந்து நடக்குற மாதிரி நான் நடந்துக்குறேன் கண்ணா.

கடவுள் கிருபை எனக்கு இருக்கு. எல்லாத்துக்கும் மேலே உங்கள் கிருபை எனக்கு இருக்கிறது. சீக்கிரம் வந்துறேன். ஓகே.Bye.Good..." என்று கூறியுள்ளார்.

# சந்தானத்துடன் கலக்கும் சாந்தனு

சாந்தனு, சந்தானம் மற்றும் நாயகி ரேஷ்மி நடித்திருக்கும் படம் கண்டேன் விரைவில் திரைக்கு வரவிருக்கும் இந்த படத்தை பற்றி இயக்குநர் முகில் கூறுகையில், "படத்தில் சந்தானத்தின் பங்கு முக்கியமானது. அவர் வரும் இடங்களில் காமெடிக்கு பஞ்சம் இருக்காது. குறிப்பாக படத்தில் நாயகி ரேஷ்மியை விட சந்தானத்துடன்தான் ஹீரோ சாந்தனுக்கு கெமிஸ்ட்ரி நன்றாக இருக்கும்" என்றார்.



# சூரியா ஜோடி ஆனார் காஜல் அகர்வால்

"மாற்றான்" படத்தில் சூர்யா ஜோடியாக கஜால் அகர்வால் நடிக்கின்றார். "கோ" பட ஹிட்டுக்கு பின்னர் "மாற்றான்" படத்தை இயக்குகிறார் கே.வி. ஆனந்த். இதன் ஷூட்டிங் அடுத்த மாத இறுதியில் தொடங்குகிறது. இதில் சூர்யா ஜோடியாக நடிக்க பல்வேறு ஹீரோயின்களிடம் படக்குழு பேசி வந்தது. இப்போது காஜல் அகர்வால் ஒப்பந்தமாகியிருக்கிறார். இதுபற்றி கஜால் கூறும் போது,

ஆமாம் சூர்யா ஜோடியாக நடிக்கின்றேன். அவருடன் நடிக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். வழக்கமாக கே.வி.ஆனந்த் படத்தில் ஹீரோயினுக்கும் முக்கியத்துவம் இருக்கும். சும்மா கிளாமருக்காக வந்து போவது போல் இருக்காது. இந்தப் படத்தில் எனது கரக்டர் வித்தியாசமானது. தற்போது 'சிங்கம்' இந்தி ரீமேக்கில் நடித்து வருகிறேன். இதையடுத்து தெலுங்கில் மகேஷ்பாபுவுடன் 'பிசினஸ்மேன்' என்ற ப்டத்தில் நடிக்கிறேன் என்றார்.

## கஞ்சாகருப்பு ஹீரோவாக நடிக்கும்


# மன்னார் வளைகுடா

லக்ஷயா புரொட்க்ஷன்ஸ் சார்பில் சிவக்குமார், ஏனஸ்டீன், சண்முக சுந்தரம், கோவிந்தன், ஷேக் அமீர், காளிதாஸ், முத்துக்குமார் தயாரிக்கும் படம் 'மன்னார் வளைகுடா'. இதில் கஞ்சாகருப்பு ஹீரோவாக நடிக்கிறார்.

அவர் ஜோடியாக பெங்களூர் மாடல் யோகா நடிக்கிறார். தனசேகரன் இயக்குகின்றார். இவர் இயக்குநர் மாதேஷிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவர். ஒளிப்பதிவு என்.வெங்கட், இசை எஸ்.சிவப்பிரகாசம், பாடல்கள் சினேகன், வசனம் கே.எஸ்.பழனி, நெய்வேலி பாரதிகுமார், சக்தி. முழுக்கமுழுக்க காமெடி படமான இதன் ஷூட்டிங் சென்னை உட்பட பல்வேறு பகுதிகளில் நடக்கிறது.




# அழகர் சாமியின் குதிரை



## திரை விமர்சனம்

வெண்ணிலா கபடிக்குழு படத்தின் மூலம் வித்தியாசமான கதை சொல்லி இயக்குநர் என பெயரெடுத்தவர் சுசீந்திரன். அடுத்த படமான நான் மகான் அல்ல திரைப் படத்தில் கமர்ஷியல் கலாட்டாவில் கால்வைத்து, அந்த வி.க.சொ. இயக்குநர் எனும் பெயரை இருட்டடிப்பு செய்திருந்தார். இப்போது அழகர்சாமியின் குதிரை மூலம் அந்த வித்தியாசமான கதை சொல்லி இயக்குநர் எனும் பெயரை மட்டுமல்ல... அதையும் தாண்டிய நற்பெயரையும் பெற்று நம்பிக்கையை கூட்டியிருக்கிறார் என்றால் மிகையல்ல!

கதைப்படி, அந்த கிராமத்து மக்களின் காவல் தெய்வமாகவும், குலசாமியாகவும் விளங்கும் அழகர் சாமியின் குதிரை வாகனம் காணாமல் போகிறது. பொம்மை குதிரை காணாமல் போன சில நாட்களில் நிஜமான வெள்ளை குதிரை ஒன்று கிராமத்துக்கு எதிர்பாராமல் வந்து சேர, ஊர் மொத்தமும் அது காணாமல்போன அழகர்சாமியின் குதிரைதான் என்று அடித்து சொல்கிறது. நம்புகிறது! நிஜமான குதிரைக்கு சொந்தக்காரரான பக்கத்து கிராமத்து இளைஞன் குதிரையை தேடி வருகிறான். அந்த குதிரை வந்த நாளாய் சுபீட்சமாய் இருக்கும் ஊர் மக்கள், குதிரையை கொடுக்க மறுத்து தேடி வந்த இளைஞனை அடித்து, உதைக்கின்றனர். பொதி சுமந்து, அந்த இளைஞனின் வயிற்றை கழுவ உதவும் அந்த குதிரை திரும்ப கிடைத்தால்தான் அவனுக்காக காத்திருக்கும் அழகான பெண்ணுடன் திருமணம் எனும் நிலையில், இளைஞனுக்கு யார் யாரெல்லாம் உதவுகிறார்கள்? எப்படியெல்லாம் உபத்திரம் செய்கிறார்கள்...? என்பதை பட்டறிவு, பகுத்தறிவு, பக்தி செறிவு இத்யாதி... இத்யாதிகளுடன் வித்தியாசமாகவும் விறுவிறுப்பாகவும் கதை சொல்லி இருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன்.



ஊர் திருவிழாவிற்காக கோயில் வரி வசூலிக்க வரும் ஊர் தலைவர்கள் படும் பாட்டில் ஆரம்பமாகும் சைலண்ட் காமெடி, குதிரை சிலையை உள்ளூர் ஆசாரியே திருடி வைத்திருக்கும் திருப்பத்தில் முடிவது வரை தொடர்வது அவ்வப்போது தியேட்டரில் சிரிப்பலையை ஏற்படுத்துவது படத்தின் பெரிய பலம். இந்த பலம் அழகில்லாத ஹீரோ, என்னவோ சாமி குதிரை காணாமல் போச்சாம்... எங்கிருந்தோ நெசமான குதிரை ஒண்ணு வந்துச்சாம்... என்னய்யா ரீல் விடுறீங்க... எனும் ரசிகர்களின் எண்ண ஓட்டங்கள் எல்லாவற்றையும் மழுங்கடிக்க செய்யும் மந்திரம்!

அழகர்சாமியாக அப்புக்குட்டி படத்தில் அவரது எண்ட்ரீக்கு முன்பிருந்தே மற்றொரு ஹீரோவாக ராமகிருஷ்ணன் எனும் கரக்டரில் பகுத்தறிவு பேசியபடி காதல் செறிவு காட்சிகளிலும் கலக்கி இருக்கும் பிரபாகரன், புரோட்டா சூரி, சப்-இன்ஸ்பெக்டர் அருள்தாஸ், ஊர் பிரசிடண்ட்டாக வரும் பிரபல பட அதிபர் அழகன் தமிழ்மணி, தேவராஜ், கண்ணாசாரி பூ.ராமு, உள்ளூர் கோடங்கி தவ மலையா ள யா ள மாந்திரீகர் என நடிகர்கள் எல்லோரும் பாத்திரம் அறிந்து பளிச்சிட்டிருக்கிறார்கள். அதிலும் மைனர் கரக்டரில் வரும் நடிகர் செமரசனை! ரகளை!!



நாயகிகளில் அப்புக்குட்டியின் ஜோடியாக வரும் சரண்யா மோகனைக் காட்டிலும் பிரபாகரனுக்கு காதலியாக நடித்திருக்கும் அத்வைதாவிற்கு நடிக்க நிறையவே வாய்ப்பு. அதை அம்மணியும் சவாலாக ஏற்றுக் கொண்டு சரியாக செய்து சபாஷ் வாங்கி விடுகிறார்.

இளையராஜாவின் பின்னணி இசையே பல இனிய பாடல்களுக்கு சமமாக படம் முடிந்த பின்பும் நம் காதுகளில் ரீங்காரமிடுவதும், தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவில் பொட்டல் காடுகளும் கூட சுவிஸ் குளிர்மலைகளாக மிளிர்வதும், பாஸ்கர் சக்தியின் பக்காவான வசனங்களும், மு.காசி விஸ்வநாதனின் கனகச்சிதமான படத்தொகுப்பும், சுசீந்திரனின் இயல்பான இயக்கத்திற்குவலு சேர்த்துள்ளன.

மொத்தத்தில் அழகர்சாமியின் குதிரை: அழகான சவாரி குதிரை! போராட்டம்

### வரலாறு படைத்தது தோனி படை

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இரண்டாவது முறையாக சம்பியன்

(சென்னை)

ஐ.பி.எல். வெற்றிக் கிண்ணத்தை தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்று சாதனை படைத்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

நேற்று நடந்த இறுதிப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

முரளிவிஜய், அஸ்வினின் அபார ஆட்டம் சென்னை அணியின் வெற்றிக்குக் கை கொடுத்தது.

இந்தியாவில் நான்காவது ஐ.பி.எல். இருபது-20 தொடர் நடந்தது. நேற்று சென்னையில் நடந்த இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை எதிர்கொண்டது.

இரு அணிகளிலும் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் தோனி சற்றும் தயங்காமல் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**சிக்ஸர் மழை**

சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு முரளி விஜய், மைக்கெல் ஹசி இணைந்து சுப்பர் அடித்தளம் அமைத்தனர். பெங்களூர் பந்துவீச்சை துவசம் செய்த விஜய், அரவிந்த் பந்தை சிக்ஸருக்கு விரட்டி அதிரடியை ஆரம்பித்தார்.

மறுபக்கம் மிகவும் பிசியாக இருந்த ஹசி முன்னணி வீரரான சகீர் மற்றும் முகமெட் பந்துகளில் தலா ஒரு சிக்ஸர் விளாசினார். தொடர்ந்து ஹயில், விக்டோரி சுழலில் விஜய் சிக்ஸர் அடிக்க சென்னை ரசிகர்கள் உற்சாகம் அடைந்தனர். பின் மிதுன் ஓவரில் 2 பவுண்டரி அடித்த விஜய் 29 பந்துகளில் அரைச்சதம் எட்டினார்.

தனது வாணவேடிக்கையை தொடர்ந்த இவர் அரவிந்த் வீசிய போட்டியின் 12 ஆவது ஓவரில் இரண்டு இமாலய சிக்ஸர்கள் அடித்தார். மறுபக்கம் விக்டோரி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஹசி அரைச்சதம் கடந்தார். முகமெட் வீசிய போட்டியின் 15ஆவது ஓவரில் ஹசி, விஜய் தலா ஒரு சிக்ஸர் அடித்தனர். இதே ஓவரில் இன்னொரு சிக்ஸர் அடிக்க பார்க்க ஹசி 45 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 63 ஓட்டங்களுடன் பரிதாபமாக ஆட்டமிழந்தார்.

**நழுவிய சதம்**

அடுத்து வந்த அணித்தலைவர் தோனி ஓட்ட வேகம் குறையாமல் பார்த்து கொண்டார். இவர் ஹயில் ஓவரில் இரண்டு சிக்ஸர் அடித்தார். அரவிந்த் வீசிய 19ஆவது ஓவரின் முதல் பந்தை தூக்கி அடித்த விஜய், சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார்.

இதில் முரளி விஜய் 52 பந்துகளில் 95 ஓட்டங்கள் (4 பவுண்டரி, 6 சிக்கஸர்கள்) எடுத்தார்.

இரண்டாவது பந்தில் தோனி (22) ஆட்டமிழந்தார்.

அடுத்த பந்தை றெய்னா தடுத் து ஆட, அரவிந்தின் ஹட்ரிக் வாய் ப்பு தகர்ந்தது. நான்காவது பந்தில் றெய்னா சிக்ஸர் அடித்து அசத்தினார்.

ஹயில் வீசிய கடைசி ஓவரில் அல்பி மோர்கல் (2) முதலில் வெளியேறினார். அடுத்த பந்தில் றெய்னா (8) போல்டானார்.

கடைசி பந்தில் பிராவோ சிக்ஸர் அடித்து, 200 ஓட்டங்களை கடக்க உதவினார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்களையிழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது.

**அஸ்வின் ஜாலம்**

கடின இலக்கை விரட்டிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி, சென்னை கிங்ஸ் விரித்த சுழல் வலையில் அப்படியே சிக்கியது. முதல் ஓவரிலேயே அஸ்வின் பயங்கர ஷோக் கொடுத்தார்.

இவரது சுழலில் அதிரடி ஹயில் பூச்சியத்துடன் ஆட்டமிழக்க சென்னை ரசிகர்கள் உற்சாக வெள்ளத்தில் மிதந்தனர்.

இத்தொடர் முழுவதும் அசத்திய ஹயில், மிக முக்கியமான இறுதிப் போட்டியில் கோட்டை விட்டதால், அரங்கில் அமர்ந்திருந்த பெங்களூர் அணியின் உரிமையாளர் மல்லையா அதிர்ச்சியில் உறைந்தார்.

**சொதப்பல் ஆட்டம்**

அடுத்து வந்தவர்களும் சொதப்பலாக ஆடினர். தொடர்ந்து அகர்வாலை (10) வெளியேற்றிய அஸ்வின் இன்னொரு அடி கொடுத்தார். ஜகதி சுழலில் டி வில்லியர்ஸ் (18), போமர்ஸ்பச் (2) சிக்கினர்.

போராடிய விராட் ஹோலி (35) றெய்னா பந்தில் ஆட்டமிழக்க, பெங் களூர் கதை முடிந்தது.

மீண்டும் பந்துவீச வந்த அஸ் வின் அணித்தலைவர் விக்டோரியை (0) வெளியேற்றினார். சகீர் கான் 21 ஓட்டங்களை எடுத்தார். கடைசி கட்டத்தில் அதிரடி காட்டிய சௌரவ் திவாரி (42) ஆறுதல் அளித்தார். பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

இவ்வெற்றியின் மூலம் ஐ.பி.எல். வெற்றிக்கிண்ணத்தை இரண்டாவது முறையாக வெல்லும் முதல் அணி என்ற சாதனையை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி படைத்தது. ஆட்டநாயகன் விருதை முரளி விஜய் வென்றார்.






**ஒரேஞ்ச் கப் ஹயில்**

நான்காவது ஐ.பி.எல்.தொடரில் பெங்களூர் அணியின் ஹயில் 608 ஓட்டங்கள் எடுத்து அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில் முதலிடம் பெற்று இதற்கான ஒரேஞ்ச் தொப்பியைத் தட்டிச் சென்றார். இத்தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த முதல் 5 வீரர்கள் விபரம் வருமாறு:


| பெயர் / அணி | போட்டி | ஓட்டங்கள் |
|---|---|---|
| ஹயில் (பெங்களூர்) | 12 | 608 |
| கேஹாலி (பெங்களூர்) | 16 | 557 |
| சச்சின் (மும்பை) | 16 | 553 |
| மார்ஷ் (பஞ்ஜாப்) | 14 | 504 |
| ஹசி (சென்னை) | 14 | 492 |


**மலிங்க அபாரம்**

பந்துவீச்சில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் மும்பையின் மலிங்க (28) முதலிடத்தைப் பெற்று இதற்காக பேர்பிள் கப் பரிசை பெற்றார். இவ்வரிசையில் முதல் 5 வீரர்களின் விபரம் வருமாறு:

| பெயர் / அணி | போட்டி | விக்கெட் |
|---|---|---|
| மலிங்க (மும்பை) | 16 | 28 |
| முனாப் படேல் (மும்பை) | 15 | 22 |
| அரவிந்த் (பெங்களூர்) | 13 | 21 |
| அஷ்வின் (சென்னை) | 16 | 20 |
| அமித் மிஸ்ரா (டெக்கான்) | 14 | 19 |







ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் சங்கானை கிளை திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் புதிய கிளை திறந்து வைக்கப்படுவதனையும் விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் காப்புறுதி நிறுவன வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# போர்க்குற்ற விசாரணையின்...

பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுநர் குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீறல்களை நிரூபிக்கத்தக்க வகையில் நம்பகமான ஆய்வொன்றை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் தலைமையின் கீழ் மேற்குலக நாடுகள் அழுத்தம் கொடுத்துள்ளன.

இவை தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் செய்யப்பட்ட பொய்யான பரப்புரைகள் எனக் குற்றம் சாட்டியுள்ள அரசாங்கம், ஐ.நாவின் வல்லுநர் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனக் கூறியுள்ளது.

அத்துடன் இலங்கைப் படைகள் பொது மக்களை குறிவைத்துத் தாக்குதல்களை மேற்கொண்டன என்ற குற்றச்சாட்டையும் மறுத்துள்ளது.

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு நீதியான நியாயமான இணக்கப்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் தவறுமானால், இது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு வழிகோலும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்பு சபைக்கூட்டத்தில் இலங்கைக்கு சீனாவும், ரஷ்யாவும் ஆதரவு வழங்குவதற்கு சாத்தியபாடுகள் மிகக் குறைந்ததாகக் காணப்படுவதாக பெரும்பாலான இராஜதந்திரிகள் எதிர்வு கூறுகின்றனர். (ச-5)

# சனல்...

சனல் 4 தொலைக்காட்சி இவ்வருடம் மூன்றாவது தடவையாக பெற்றுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட மானுடத்திற்கு எதிரான குற்றங்களை அம்பலப்படுத்தியதில் சனல் 4 தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு வெற்றி பெற்றுள்ளதாக இவ்விருதுகளை தெரிவு செய்த நடுவர்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தொடரும்...

329 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு சீதாவக்க பகுதியில் 592 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை களனி மற்றும் மா ஓயா ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் அவற்றின் அருகில் வசிப்பவர்கள் விழிப்புடன் இருக்கும் படியும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ச-5)


# JAFFNA GYM
## (யாழ் ஜிம்)

கட்டுக்கோப்பான உடல் அமைப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும் யாழ்.நகரில் எங்கும் இல்லாதவாறு புத்தம் புதிய நவீன இலத்திரனியல் உபகரணங்களுடன் ஆண், பெண் இருபாலாருக்குமாக கல்வியங்காட்டில் உதயமாகியுள்ளது.



இன்றே இணையுங்கள்
No. 20 , இராசவீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
0214917243



(சி-3308)



# இறைச்சிக் கோழி விற்பனை



CSI
சுத்தம் செய்த நிறை Kg - 420/=
முழுநிறை Kg - 270 /=
வரணி மிஷன் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367
(4895)



Microsoft Office
Rs.800 Course fee
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS Supported By UNDP/JRRP
Closing Date 31.05.2011
324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
Free
Dip. English
ICDL, DTP
Typing
Hardware


# கேபியின் கருத்...

கருத்துத் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது அவதானிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடித் தொடர்பிருந்ததாக குமரன் பத்மநாதன் அண்மையில் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்ததன் மூலம் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு முதன்முறையாக அதன் முக்கிய உறுப்பினர் ஒருவரால் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வாறான பின்புலத்தில் குமரன் பத்மநாதனின் கருத்துக்கள் தொடர்பில் தற்போதைக்கு எவ்வித பதிலையும் அளிக்கப் போவதில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா கடைசிவரை கோரி வந்திருந்த போதிலும் அந்த அமைப்பின் முக்கியஸ்தராக இருந்து மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டது முதல் குமரன் பத்மநாதனை இந்தியாவில் வைத்துவிசாரணைக்குட்படுத்தும் நோக்கில் நாடுகடத்துமாறு இதுவரைகோரிக்கையையும் முன்வைக்கவில்லை. (ச-5)


# குமரகுரு வாணிபம்

## வைகாசித் திருவிழா மலிவு விற்பனை

அன்பிற்கினிய எமது வாடிக்கையாளர்கட்கு,
எதிர்வரும் 30.05.2011 தொடக்கம் 30.06.2011 வரை விசேட சிறப்புக் கழிவு விற்பனையாக ரெடிமேட் ஆடைகளுக்கு இரண்டுக்கு ஒன்று இலவசமாக வழங்கவுள்ளோம். அத்துடன் ஏனைய பொருட்கள் (10,000) பத்தாயிரம் பெறுமதியான கொள்வனவுக்கு உங்கள் அதிர்ஷ்டப் பெட்டியில் இருந்து உங்களால் தெரிவுசெய்யப்படும் பரிசுப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கவுள்ளோம் என்பதனையும் சித்திரைப் புதுவருடப் பிறப்பிற்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் 20.06.2011 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவுள்ளோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இச் செய்தியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றோம்.

இப்படிக்கு உங்கள் ஆதரவின் கீழ்

குமரகுரு மல்ரிசொப்.
பிரதான வைத்தியசாலை முன்பாக,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குமரகுரு புடைவையகம்,
A-9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

விரைவான சேவைக்கு குமரகுரு
(சி-3296)



# பகுதி நேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 45 வருடங்களாக சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற வாய்ப்பு.

- 2 வார பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள் : யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி.

## அடிப்படைத் தகைமைகள்:-

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18-55 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 05.06.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல.4996
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை , பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(4996)



# கலைமகள் அழகு நிலா
## Beauty Academy

புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்
பயிற்சி ஆரம்பம் - 1ம் பிரிவு-06.06.2011
2ம் பிரிவு-07.06.2011

பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். வயதெல்லைகள் கிடையாது. பயிற்சினை பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியை பெற்றுக்கொள்ளவும் சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்புக்கள் இடம்பெறும்.

பயிற்சிகள்

- Facial (10வகை)
- Laser Treatment
- Laser Facial
- தலைவலி, முதுகுவலி, இடுப்புவலி இவற்றுக்கான சிகிச்சை
- Hot oil Massage
- Pimple Treatment
- Eyebrow Threading
- waxing
- Hair colouring
- Hair Curling
- Hair Stratening (02வகை)
- Hair Perming (02வகை)
- Hair Cutting
- கறுப்பு காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- Bleaching
- face Cleaning
- Manicure Pedeicure
- Bridal Make up (06வகை)

பயிற்சி நேரம் - மு.ப. 10 மணி-பி.ப. 1.30 வரை அனுமதிக் கட்டணம் 1000/-
கலைமகள் அழகு நிலா,
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே. - 0773719071



DHL
உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
24 மணி நேரத்தில் உள்நாட்டிற்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

London -Rs.750
Canada, U. S. A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss
Rs.900

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட

திருமுருகன் கொம்நெற்

TCN Express,
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835



இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம். இல.18,பிரதானவீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.